# தினபூமி

thinaboomi.com

பூமி: 32 சுற்று: 19 மார்கழி 30

RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, புதன், ஜனவரி 14, 2026

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**ஈரானுடன் வர்த்தகம் செய்தால்.. அதிபர் ட்ரம்பின் அறிவிப்பால் இந்தியாவுக்கு மேலும் பாதிப்பு**

....2-ம் பக்கம்

**ஜனநாயகன் பட விவகாரம்: தமிழ் கலாச்சாரத்தின் மீதான தாக்குதல்: ராகுல் குற்றச்சாட்டு**

...3-ம் பக்கம்

**அதிக முறை ஆட்டநாயகன் விருது: சச்சினின் சாதனையை முறியடிக்க கோலிக்கு வாய்ப்பு**

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தலைமைச் செயலகத்தில், 10,000 கோடி ரூபாய் முதலீட்டில், 1000 நபர்களுக்கு உயர்தொழில்நுட்ப வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் சர்வம் ஏ.ஐ. நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச்செயலாளர் முருகானந்தம், ஐ.ஐ.டி. மெட்ராஸ் இயக்குநர் காமகோடி, சர்வம் ஏ.ஐ. நிறுவனத்தின் இணை-நிறுவனர் பிரத்யுஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சர்வம் ஏ.ஐ. நிறுவனத்துடன் தமிழக அரசு ஒப்பந்தம்:

# தமிழ்நாட்டில் ரூ.10 ஆயிரம் கோடி முதலீட்டில் 1,000 பேருக்கு வேலை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்து

சென்னை, ஜன. 14-

**தமிழ்நாட்டில் ரூ.10 ஆயிரம் கோடி முதலீட்டில் 1,000 பேருக்கு வேலை வழங்கும் விதமாக சர்வம் ஏ.ஐ. நிறுவனத்தோடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சென்னை தலைமை செயலகத்தில் தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா செய்தியாளர்களிடம் பேசியதாவது:- உலகமே ஏ.ஐ. நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஏ.ஐ.யால் வேலை வாய்ப்புக்கு பாதிப்பு இல்லாமல், விழிப்புணர்வு வேண்டும். தமிழ்நாட்டில் ரூ.10,000 கோடி முதலீட்டில் 1,000 பேருக்கு உயர்தொழில்நுட்ப வேலை வாய்ப்புகள் வழங்கும் வகையில், சர்வம் ஏ.ஐ நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

தமிழ்நாட்டின் தரவுகளைத் தமிழ்நாடே வைத்துக் கொண்டு அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கிச் செல்ல இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்குப் பெரிய தரவு மையம் அமைக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இதனைத்தொடர்ந்து திட்டப் பயன்கள் குறித்து அமைச்சர் டிஆர்.பி. ராஜா மற்றும் சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

### உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை

# முதல்வர் ஸ்டாலின் ஜன.17-ல் நேரில் தொடங்கி வைக்கிறார்

## ‘இல்லங்கள்தோறும் மகிழ்ச்சி பொங்கட்டும்’ என தமிழக மக்களுக்கு ‘பொங்கல்’ தின வாழ்த்து

சென்னை, ஜன. 14-

**தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை யொட்டி மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகள் கோலாகலமாக நடைபெறுவது வழக்கம். அதே போல் வருகிற பொங்கல் பண்டிகையை யொட்டி உலக புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி வருகிற 17-ம் தேதி (சனிக்கிழமை) நடைபெறுகிறது. இதற்காக பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று தொடங்கி வைக்க உள்ளார்.**

### தொண்டர்களுக்கு...

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. தொண்டர்களுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்து எழுதி உள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது:- தை முதல்நாள் தமிழர் வாழ்வில் சிறப்புமிக்க நாள். இல்லங்களிலும் உள்ளங்களிலும் இன்பம் பொங்கிடும் பொங்கல் விழா தொடங்குகிற நன்னாள். உழைப்பைப் போற்றுகின்ற திருநாள். தமிழ்ப் பண்பாட்டை உலகம் அறிந்திடும் வகையில் மகிழ்ச்சியான கலை, பண்பாட்டு நிகழ்வுகளும் பாரம்ப ரியமிக்க விளையாட்டுப் போட்டிகளுமாகக் கொண்டாடப்படுகிற நாள். அந்த மகிழ்ச்சி இந்த ஆண்டில், இன்னும் கூடுதலாக இருப்பதை தமிழ்நாடு முழுவதும் காண முடிகிறது.

### முன்னணி மாநிலம்....

பொங்கல் திருநாள் என்பது தமிழர்கள் அனைவருக்குமான திருவிழா. அதில் சாதி பேதம் கிடையாது. மத வேறுபாடுகள் கிடையாது. ஏழை - பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு கிடையாது. பெண் - ஆண் என்ற பாகுபாடு கிடையாது. எல்லாருக்குமான திருநாள் பொங்கல். எல்லாருக்குமான அரசு, திராவிட மாடல். தமிழ்நாடு இன்று பல்வேறு இலக்குகளில் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. அதை ஒன்றிய அரசின் துறைகள் வெளியிடும் புள்ளி விவரங்களும் தர வரிசைகளுமே உறுதிப்படுத்துகின்றன.

> **மகிழ்ச்சி பொங்கட்டும்**
>
> **தை முதல் நாளில், தமிழர்களின் இல்லங்கள்தோறும் மகிழ்ச்சி பொங்கட்டும். அந்த மகிழ்ச்சி நம் அனைவருக்கும் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் வழங்கட்டும். சூரியனைப் போற்றும் பொங்கல் நன்னாள், உடன்பிறப்புகளின் உழைப்பினால் கழகத்திற்கு வெற்றிப் பொங்கலாக அமையட்டும். தமிழ்நாடு வெல்லட்டும். கழக உடன்பிறப்புகளுக்கும், தமிழர்கள் அனைவருக்கும் இனிய தமிழர் திருநாள் - தைப்பொங்கல் வாழ்த்துகள்**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

### வீடுகள்தோறும்...

1 கோடியே 30 லட்சம் குடும்பத் தலைவியருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வரும் திராவிட மாடல் அரசு, தமிழ் நாட்டில் உள்ள ஏறத்தாழ 2 கோடியே 23 லட்சம் அரிசி அட்டை தாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் ரொக்கத்துடனான பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கியுள்ளது. தமிழர் திருநாளில், தமிழர்களின் வீடுகள்தோறும் மகிழ்ச்சி பொங்குகிற வகையில் தமிழ்நாடு அரசு வழங்கி உள்ள இந்தப் பொங்கல் தொகுப்பைப் பெற்றுச் செல்லும் தாய்மார்களின் மலர்ந்த முகமும் அவர்களின் உள்ளத்தில் இருந்து வெளிப்படும் நல்வாழ்த்துகளும்தான் திராவிட மாடல் ஆட்சிக்கான நற்சான்று.

### மகிழ்ச்சி பொங்க...

தமிழ்நாட்டின் பத்தாண்டு கால இருளை விரட்டி, விடியலைக் கொண்டு வந்த திராவிட மாடல் ஆட்சி அமைவதற்கு ஓயாது பாடுபட்டவர்கள் நம் உடன்பிறப்புகள். அந்த உடன்பிறப்புகளின் மனதிலும் மகிழ்ச்சி பொங்க வேண்டும் என்பதால்தான் கழகத்தின் மாவட்ட – ஒன்றிய –நகர – பகுதி -பேரூர் கிளைகள் சார்பில் மாநிலம் முழுவதும் பொங்கல் விழாக்கள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. கழகத்தினர் நடத்துகின்ற பொங்கல் விழாக்கள் பற்றிய செய்தி ஒவ்வொன்றையும் நான் ஆர்வத்துடன் கவனித்து வருகிறேன்.

(கடைசி பக்கம் பார்க்க)

### மாநில அரசுகள் பெரும் இழப்பீடு வழங்க நேரிடும்:

# தெரு நாய்கள் விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட் எச்சரிக்கை

புதுடெல்லி, ஜன. 14-

**கடந்த 5 ஆண்டுகளாக தெரு நாய்கள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை மாநில அரசுகள் அமல்படுத்தாதது குறித்து கவலை தெரிவித்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், தெரு நாய்க் கடி தொடர்பான விசயங்களில் பெரும் இழப்பீடு வழங்க நேரிடும் என எச்சரித்துள்ளனர்.**

நிறுவனங்கள், சாலைகளில் இருந்து தெரு நாய்களை அகற்ற வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 7-ந்தேதி உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை மாற்றக்கோரி ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது. நேற்று விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, என்.பி. அஞ்சாரியா ஆகிய நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் முன் தெரு நாய் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி விக்ரம் நாத், "கடந்த 5 ஆண்டுகளாக தெரு நாய்களுக்கு எதிரான வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்தாத மாநிலங்களிடம் ஒவ்வொரு நாய்க் கடி, நாய்க்கடியால் உயிரிழப்பு அல்லது காயம் போன்றவற்றிற்காக பெரும் இழப்பீடு கேட்கப்படும். மேலும், தெரு நாய்களுக்கு உணவளிப்பவர்கள் மீது பொறுப்பும் கடமையும் நிர்ணயிக்கப்படும். இந்த விலங்குகள் மீது உங்களுக்கு அவ்வளவு அன்பு இருந்தால், ஏன் அவற்றை உங்கள் வீட்டிற்கு அழைத்து செல்லக்கூடாது? இந்த நாய்கள் ஏன் தெருக்களில் சுற்றித் திரிந்து, மக்களை கடித்து பயமுறுத்த வேண்டும்?. இவ்வாறு நீதிபதி விக்ரம் நாத் தெரிவித்தார்.

மற்றொரு நீதிபதி மேத்தா "9 வயதுச் சிறுவனை நாய்கள் தாக்கும்போது யார் பொறுப்பேற்க வேண்டும்? அந்த நாய்களுக்கு உணவளிக்கும் அமைப்பா? இந்தப் பிரச்சனையை நாங்கள் கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?" என கேள்வி எழுப்பினார்.

### எம்.ஜி.ஆர். 109-வது பிறந்தநாள்: சென்னையில்

# வருகிற 17-ம் தேதி இ.பி.எஸ். மாலை அணிவித்து மரியாதை

சென்னை, ஜன. 14-

**புரட்சி தலைவர் எம்.ஜி.ஆரின் 109-வது பிறந்த நாளான வருகிற 17-ம் தேதி சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலை, எம்.ஜி.ஆர். மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள, எம். ஜி.ஆர். உருவச் சிலைக்கு, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.**



அ.தி.மு.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- புரட்சி தலைவர் எம்.ஜி.ஆரின் 109-வது பிறந்த நாளான வருகிற 17-ம் தேதி (சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு, சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலை, எம்.ஜி.ஆர். மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள, எம். ஜி.ஆர். உருவச் சிலைக்கு, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி பழனிசாமி, மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, கழகக் கொடியினை ஏற்றி வைத்து இனிப்பு வழங்க உள்ளார். அதனைத் தொடர்ந்து, தலைமைக் கழகச் செயலாளர்கள் மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளனர். இந்த நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் கழக அமைப்புகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா, கேரளா, புது டெல்லி மற்றும் அந்தமான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும், வருகிற 17-ம் தேதி அன்று எம்.ஜி.ஆர். உருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், ஆங்காங்கே எம்.ஜி.ஆர். படங்களை வைத்து மாலை அணிவித்தும், மரியாதை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொங்கல் பண்டிகை தினத்தன்று தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பா?

## வானிலை ஆய்வு மையம் விளக்கம்

சென்னை, ஜன. 14-

**பொங்கல் பண்டிகையன்று தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பில்லை என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த அக்டோபர் மாதம் தொடங்கியது. அப்போது ஒரு வாரத்திற்கும் மேலாக மழை கொட்டியது. அதன் பின்னர் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதற்கிடையில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென்மாவட்டம், கடலோர மாவட்டம், டெல்டா மாவட்டங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

அதன்படி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த 3 நாட்களுக்கு முன் முதல் லேசான சாரல் மழை முதல் மிதமான மழை பெய்து வருகிறது. மழைக்கு இடையில் பனிப்பொழிவும் அதிகமாக காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 15-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. பொங்கல் பண்டிகைக்கு மழை பெய்யுமா? பெய்யாதா? என்ற சிந்தனை பொது மக்களிடம் மேலோங்கி இருந்தது. இந்நிலையில், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வருகிற 15-ந்தேதி (பொங்கல் பண்டிகை) முதல் 19-ந்தேதி வரை வறண்ட வானிலை நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன்காரணமாக இன்று (14-01-2026) தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொங்கல் பரிசை பெறாதவர்கள் இன்று பெற்றுக்கொள்ளலாம்: தமிழ்நாடு அரசு

சென்னை, ஜன. 14-

**தமிழகம் முழுவதும் நியாய விலைக் கடைகளில் இன்றும் (ஜன. 14) பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும் பொங்கல் பரிசுத் தொகுப்பை பெறாதவர்களும் இன்று பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ. 3,000 ரொக்கம் வழங்கும் திட்டத்தை சென்னை ஆலந்தூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த ஜன. 8 ஆம் தேதி தொடங்கிவைத்தார். இந்த பரிசுத் தொகுப்புகள் நியாய விலைக் கடைகள் மூலம் ரேஷன் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக அந்தந்த நியாய விலைக் கடை ஊழியர்கள் வீடுவீடாகச் சென்று குறிப்பிட்ட தேதியிட்டு டோக்கன் விநியோகித்தனர்.

அந்த டோக்கன் அடிப்படையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு ரூ. 3,000 பரிசுத் தொகை மற்றும் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகின்றது. டோக்கன் பெறாதவர்கள் அனைவரும் நேற்று நியாய விலைக் கடைகளுக்கு நேரில் சென்று பொங்கல் பரிசுத் தொகுப்பை பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழக அரசு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், மக்கள் சிரமமின்றி பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு வசதியாக இன்றும் நியாய விலைக் கடைகள் செயல்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பை பெறாதவர்கள் இன்று பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -250.48 | -57.95 | 1 சவரன் ₹1,05,360 | 1 கிலோ ₹292,000 | ₹90.27 | ₹100.75 |
| பாயிண்ட் 83,627.69 | பாயிண்ட் 25,732.30 | 1 கிராம் ₹13,170 | 1 கிராம் ₹292.00 | | டீசல் ₹92.34 |

### ஈரானுடன் வர்த்தகம் செய்தால் 25 சதவீத வரி:

# அதிபர் ட்ரம்பின் அறிவிப்பால் இந்தியாவுக்கு மேலும் பாதிப்பு

**நியூயார்க், ஜன. 14-**

ஈரான் இஸ்லாமிய குடியரசு நாடுடன் வர்த்தகம் செய்து, அமெரிக்காவுடனும் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்திருப்பது இந்தியாவுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஈரான் நாட்டில் பணவீக்கம் அதிகரிப்பு, விலைவாசி உயர்வு போன்றவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் 16-வது நாளாக இன்றும் போராட்டம் நீடித்து வருகிறது. போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 544 பேர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 10,681 பேர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இந்த சூழலில், ஈரானை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுவேன் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறி வருகிறார். போராடும் மக்கள் பாதிக்கப்பட்டால், ஈரான் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். எனினும், உங்களுடைய சொந்த விவகாரங்களில் கவனம் செலுத்துங்கள் என ஈரான் தலைவர் காமேனி கூறினார்.

இந்நிலையில், ஈரான் பற்றிய கேள்விக்கு பதிலளித்த வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட், ஈரான் விவகாரத்தில் அனைத்து விசயங்களும் ட்ரம்பின் மேஜை மீது ஆவணங்களாக வைக்கப்பட்டு உள்ளன. அவற்றில் ஈரான் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்துவதும் ஒன்று என்று கூறி அதிர்ச்சி ஏற்படுத்தினார்.

இந்த சூழலில், ஈரானை நேரடியாக தாக்குவதற்கு பதிலாக மறைமுக தாக்குதல் நடத்தும் வகையிலான முடிவை ட்ரம்ப் எடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டு உள்ள செய்தியில், ஈரான் இஸ்லாமிய குடியரசு நாடுடன் வர்த்தகம் செய்து, அமெரிக்காவுடனும் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இது உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த உத்தரவு இறுதியானது மற்றும் முடிவானது. இந்த விவகாரத்தில் கவனம் செலுத்திய உங்கள் அனைவருக்கும் நன்றி என தெரிவித்து உள்ளார்.

இதனால், ஈரானுடன் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் நாடுகளின் வர்த்தகம் பாதிக்கப்படும். குறிப்பாக வரிவிதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவுக்கு மேலும் இது பாதிப்பை ஏற்படுத்தும். ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் பின்வாங்கும்போது, அது ஈரானுக்கு வர்த்தக ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும். ஏற்கனவே பணவீக்கம் அதிகரிப்பு, விலைவாசி உயர்வு போன்றவற்றால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஈரானின் நிலைமையை மோசமடைய செய்யும்.

# வங்கதேசத்தில் இந்து மதத்தை சேர்ந்த மேலும் ஒருவர் கொலை

**டாக்கா, ஜன. 14-**




வங்கதேசத்தின் சிட்டகாங்கில் சமீர் தாஸ் என்ற 28 வயது ஆட்டோ ஓட்டுனரை கும்பல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வழிமறித்து சரமாரியாக தாக்கியுள்ளது. இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவர் இந்து மதத்தை சேர்ந்தவர்.

வங்கதேசத்தில் மாணவர் அமைப்பு தலைவர் கடந்த மாதம் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு நடந்த போராட்டங்கள் வன்முறையாக மாறின. கொல்லப்பட்டவர் இந்தியாவுக்கு எதிராக பேசி வந்தவர் என்பதால் அவரது கொலையை கண்டித்து நடந்த போராட்டங்களில் இந்தியாவுக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. மேலும் அங்கு சிறுபான்மையினராக உள்ள இந்துக்கள் மீதும் தாக்குதல்கள் தொடர்கின்றன.

இந்நிலையில் வங்கதேசத்தின் சிட்டகாங்கில் சமீர் தாஸ் என்ற 28 வயது ஆட்டோ ஓட்டுனரை கும்பல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வழிமறித்து சரமாரியாக தாக்கியுள்ளது. இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவர் இந்து மதத்தை சேர்ந்தவர். முதற்கட்ட தகவல்களின்படி, இந்தத் தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டதாக தெரிகிறத. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. கடந்த ஒரு சில வாரங்களில் மட்டும் 10 க்கும் மேற்பட்ட இந்துக்கள் கொல்லப்பட்டனர்.

# ஈரான் அரசுக்கு எதிராக போராடிய இளைஞருக்கு மரண தண்டனை..!

**தெஹ்ரான், ஜன. 14-**



ஈரானில் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றால் அரசு மற்றும் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு எதிராக போராட்டங்கள் நடந்து வருகிறது. அங்கு 2 வாரங்களுக்கு மேலாக போராட்டங்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது. போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதனால் ஈரானில் பல இடங்களில் வன்முறை ஏற்பட்டது. போராட்டங்கள் பரவுவதை தடுக்க செல்போன், இணைய சேவை முடக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் போராட்டங்கள் கட்டுக்குள் வரவில்லை. இதற்கிடையே போராட்டம்-வன்முறையில் பலியானவர்களின் எண்ணிக்கை 646-ஆக உயர்ந்துள்ளது. இதற்கிடையே ஈரானில் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கு அந்நாட்டு அரசு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. போராட்டத்தில் பங்கேற்கும் எவரும் கடவுளின் எதிரி என்று கருதப்படுவார்கள். அது மரண தண்டனைக்குரிய குற்றம் என்று தெரிவித்தது.

இந்த நிலையில் போராட்டத்தில் பங்கேற்ற வாலிபர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. தலைநகர் தெஹ்ரானின் புறநகர்ப் பகுதியான பர்திசை சேர்ந்த சுல்தானி(26) என்பவர் போராட்டத்தில் பங்கேற்றதற்காக கடந்த 8-ந்தேதி கைது செய்யப்பட்டார். அவருக்கு கடந்த 11-ந்தேதி மரண தண்டனை விதிக்கப்பட்டதாக அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் சுல்தானியை குடும்பத்தினர் 10 நிமிடங்கள் மட்டுமே சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். சுல்தானிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை நாளை நிறைவேற்றப்பட உள்ளதாக ஒரு மனித உரிமை அமைப்பு தெரிவித்தது. போராட்டத்தில் பங்கேற்றதாக மரண தண்டனை விதிக்கப்பட்ட முதல் நபரும் இவரே ஆவார்.

# நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தடை? வெளியான தகவலுக்கு தமிழ்நாடு அரசு மறுப்பு

**சென்னை, ஜன. 14-**

நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சமூக வலைத் தளங்களில் செய்தி பரவிய அது தொடர்பாக தமிழக அரசு விளக்கமளித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக ஹிஜாப் அணிந்து வருவோருக்கு நகை விற்பனை செய்யமாட்டோம் என்று நகை வியாபாரிகள் சங்கம் அறிவித்து உள்ளதாக படத்துடன் செய்தி ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர். இதுகுறித்து தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டு உள்ளதாவது:-

செய்தியின் படத்தில் இடம் குறிப்பிடப் படாததால் தமிழ்நாட்டில் நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தடை விதிக்கப்பட்டு உள்ளதாக சமூக வலைத்தளங்களில் தவறாகப் பகிரப்படுகிறது. உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் நகைக்கடைகளில் ஹிஜாபுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளதாக செய்திகளில் வெளியாகி இருக்கிறது. தமிழ்நாட்டில் அல்ல. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# ஜெர்மனி வழியே பயணிக்க இந்திய பயணிகளுக்கு விசா தேவை இல்லை

## வெளியானது புதிய அறிவிப்பு

**காந்தி நகர், ஜன. 14-**

இந்திய பாஸ்போர்ட் உள்ளவர்கள் ஜெர்மனி அரசு விசா இல்லாத போக்குவரத்து வசதியை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதன் மூலம் ஜெர்மனி வழியாக மற்ற நாடுகளுக்குச் செல்லும் இந்தியப் பயணிகள் இனி தனியாக ஜெர்மன் விசா எடுக்க வேண்டிய அவசியமில்லை.

ஜெர்மனி நாட்டின் அதிபர் பிரட்ரிக் மெர்ஸ் 2 நாள் பயணமாக இந்தியா வந்தார். குஜராத் வந்திறங்கிய அவர் அங்கு பிரதமர் மோடியை சந்திந்தார். இதன் பின் இருவரும் சபர்மதி ஆசிரமம் சென்று மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் ஒரு நாட்டு பிரதிநிதிகள் மற்றும் மோடி, பிரட்ரிக் பங்கேற்ற உயர்மட்ட கூட்டம் நடைபெற்றது.

இந்நிலையில் இந்திய பாஸ்போர்ட் உள்ளவர்கள் ஜெர்மனி அரசு விசா இல்லாத போக்குவரத்து வசதியை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதன் மூலம் ஜெர்மனி வழியாக மற்ற நாடுகளுக்குச் செல்லும் இந்தியப் பயணிகள் இனி தனியாக ஜெர்மன் விசா எடுக்க வேண்டிய அவசியமில்லை.

ஜெர்மனியில் உள்ள சர்வதேச விமான நிலையங்களின் வழியாக மற்ற நாடுகளுக்குப் பயணம் செய்யும்போது, இனி ஏர்போர்ட் டிரான்சிட் விசா தேவையில்லை. குறிப்பாக அமெரிக்கா, கனடா அல்லது லண்டன் போன்ற நாடுகளுக்கு ஜெர்மனி வழியாகச் செல்லும் இந்தியர்களுக்கு இது பெரும் நிம்மதி அளிக்கும்.

# போர்நிறுத்தத்திற்கு பிறகு காஸாவில் இதுவரை 100 குழந்தைகள் கொலை

## ஐக்கிய நாடுகள் சபை தகவல்


**காஸா, ஜன. 14-**

காஸாவில், போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டதற்குப் பிந்தைய இஸ்ரேலின் தாக்குதல்களில் சுமார் 100 பாலஸ்தீன குழந்தைகள் கொல்லப்பட்டதாக, ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

காஸாவில், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன கிளர்ச்சிப்படையான ஹமாஸ் இடையில் கடந்த 2025 அக்டோபர் 10 ஆம் தேதி போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து, வீடுகளை விட்டு வெளியேறிய பாலஸ்தீன மக்கள் தங்களது வசிப்பிடங்களுக்குத் திரும்பி வந்தனர். ஆனால், போர்நிறுத்த ஒப்பந்தம் அமலில் உள்ள நிலையிலும் இஸ்ரேல் ராணுவம் காஸாவின் மக்கள் குடியிருப்புகள் நிரம்பிய இடங்களின் மீது தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருவதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டதற்குப் பிறகு காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதகளில் சுமார் 100 குழந்தைகள் கொல்லப்பட்டதாக, ஐ.நா. குழந்தைகள் அமைப்பின் (யூனிசெஃப்) செய்தித்தொடர்பாளர் ஜேம்ஸ் எல்டர் இன்று (ஜன. 13) தெரிவித்துள்ளார். காஸா மீதான இஸ்ரேல் வான்வழி, ட்ரோன்கள், டேங்க் ஷெல்கள், துப்பாக்கிச் சூடு ஆகிய தாக்குதல்கள் மூலம் குழந்தைகள் கொல்லப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார். முன்னதாக, காஸாவில் கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் நடத்திய போரில் 71,391 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இத்துடன், போர்நிறுத்தம் அமலில் உள்ள சூழலில் மட்டும் இதுவரை 440-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**14-01-2026**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எந்த ஒரு விஷயத்திலும் எச்சரிக்கையுடன் நடந்தால் ஏமாற்றங்களைத் தவிர்க்கலாம். வழக்குத் தொடுக்கும் எண்ணத்தைக் கை விடுவது நல்லது. உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**ரிஷபம்:-** வியாபாரம் மற்றும் தொழில் அபிவிருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

**மிதுனம்:-** தனவரவு கூடி எல்லா நலன்களும் உண்டாகும். இனிய பயணங்களால் இன்பம் உண்டாகும். சொந்த வீட்டுக் கனவு நனவாகும். பெயரும், புகழும் உண்டாகும்.

**கடகம்:-** பயணங்கள் மற்றும் செயல்பாடுகளில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழி இல்லாத வகையில் வேதனைகளும் ஏற்படும். குழந்தைகளுக்கு சிறு உடல் உபாதைகள் ஏற்படலாம்.

**சிம்மம்:-** வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போடுவது நல்லது. உங்கள் பொருட்கள் அனைத்தையும் பத்திரப் படுத்திக் கொள்வது நல்லது. தாயின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை.

**கன்னி:-** குடும்பத்தின் ஆசைகளைத் தீர்க்க நினைத்தால் செலவுகள் அதிகமாகும். உங்கள் உண்மையான உழைப்பு விழலுக்கு இறைத்த நீராகும். நண்பர்களிடம் பகைமை பாராட்டாது இருப்பது நல்லது.

**துலாம்:-** எதிலும் நியாயமாக நடக்க முற்படுங்கள். மனைவியின் கலகத்தால், வீட்டில் சிறு குழப்பம் ஏற்படலாம். உயர் அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பதவி உயர்வுக்கு சாதகமான சூழல் உருவாகும்.

**விருச்சிகம்:-** பல வழிகளிலும் பணம் வந்து மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். பெண்கள் விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும்.

**தனுசு:-** வீண் செலவுகள் அதிகரிக்கும். தேவையற்ற கோபத்தால், மனைவியின் பிடிவாதத்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் எழலாம். உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வுக்கு வழி பிறக்கும்.

**மகரம்:-** பெண்களால் இலாபம் ஏற்படும். பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். பிரிந்த உறவுகள் ஒன்று சேரும். எல்லா வகையிலும் சந்தோஷம் அதிகரிக்கும்.

**கும்பம்:-** பயன் கிடைக்கும் என நினைக்கும் காரியங்களில் மட்டும் ஈடுபடுவீர்கள். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அதிகார தோரணையுள்ள பதவிகளைப் பெறுவீர்கள்.

**மீனம்:-** சுகம், சந்தோஷம், பயணத்தில் உல்லாசம் ஆகியவை ஏற்படும். தனவரவு கூடும். நோய் நீங்கி ஆரோக்கியம் பெருகும். வியாபாரிகளுக்கு தொழில் விருத்தி ஏற்படும்.



**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில் நேற்று, காவல்துறை சார்பில், தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சேர்க்க தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட 50 திருநங்கையர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 திருநங்கையர்களுக்கு நியமன ஆணைகளை வழங்கினார்.**

### கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில்

# ரவுடி கொல்லப்பட்ட சம்பவம்: 4 போலீசார் பணியிடை நீக்கம்

**சென்னை, ஜன. 14-**

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் ரவுடி கொலை செய்யப்பட்ட சம்பவத்தின்போது பணியில் இருந்த 3 பெண் போலீசார் உட்பட 4 போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

சென்னை கொளத்தூர், மகாத்மா காந்தி நகர் பகுதியை சேர்ந்தவர் ஆதி என்ற ஆதிகேசவன் (வயது 23). இவர்மீது சென்னை ராஜமங்கலம் போலீஸ் நிலையத்தில் கொலை, கொலை முயற்சி உள்ளிட்ட 7 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது. ஆதி, ரவுடிகள் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளார். இந்தநிலையில், ரவுடி ஆதியின் பெண் தோழியான சுசித்ரா (21) என்பவர் கடந்த மாதம் பிரசவத்திற்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்த்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு 7-வது மாதத்தில் கடந்த 3 நாட்களுக்கு முன் பெண் குழந்தை பிறந்தது.

குழந்தை இறந்து பிறந்ததால் சுசித்ரா மிகுந்த மனவேதனையில் இருந்தார். இதனால் சுசித்ராவிற்கு ஆறுதல் கூறுவதற்காக ரவுடி ஆதி இரவோடு இரவாக தனது மற்றொரு தோழியான சாருமதி (23) என்பவருடன் ஆஸ்பத்திரிக்கு வந்தார்.அங்கு இறந்து போன குழந்தையை பார்த்த பின்னர் பிரசவ வார்டுக்கு எதிரே உள்ள பார்வையாளர்கள் தங்கும் இடத்தில் சாருமதியுடன் ஆதி இரவு படுத்து தூங்கினார்.

இதற்கிடையே நேற்று முன்தினம் அதிகாலை 3.45 மணியளவில் 6 பேர் கொண்ட கும்பல் ரவுடி ஆதியை கொலை செய்ய ஆஸ்பத்திரியில் புகுந்தன. இதில் 3 பேர் ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனத்தில் தயார் நிலையில் இருந்தனர். 3 பேர் மட்டும் ஹெல்மெட் அணிந்தவாறு ஆஸ்பத்திரி வளாகத்திற்குள் நுழைந்து ரவுடி ஆதியை தேடினர்.

அவர் இருக்கும் இடம் தெரிந்ததும் சரமாரியாக வெட்டியுள்ளனர். ஆதியின் தலையில் வெறி கொண்டு வெட்டியதில் அவரது தலை சிதைந்தது. இதனால், தூங்கி கொண்டிருந்தபோதே ரவுடி ஆதி பரிதாபமாக உயிரிழந்தார்.

இது தொடர்பாக கிடைத்த தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு வந்த கீழ்ப்பாக்கம் போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், கொலை தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.கண்காணிப்பு கேமரா காட்சிகளின் அடிப்படையில் அலிபாய், கார்த்திக் ஆகிய இருவரை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை பிடிக்க போலீசார் தனிப்படை அமைத்து தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், சம்பவம் நடைபெற்ற போது பணியில் இருந்த இருந்த 3 பெண் போலீசார் உட்பட 4 போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். கீழ்ப்பாக்கம் ஆய்வாளர் ஸ்ரீனிவாசன், உதவி ஆணையர் துரை ஆகியோருக்கு மெமோ வழங்கப் பட்டுள்ளது.

### 9 தனிப்படைகள் அமைப்பு

இந்த கொலை சம்பவம் தொடர்பாக கூடுதல் போலீஸ் கமிஷனர் நரேந்திரன் நாயர் கூறியதாவது., ஆதிகேசவன் சரித்திர பதிவேடு குற்றவாளி. 2022-ம் ஆண்டு நடந்த கொலை வழக்கில் 2 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டு தற்போது தான் வெளியே வந்தார். இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை கைது செய்ய 9 தனிப்படை அமைத்துள்ளோம். பழிக்கு பழியாக இந்த கொலை நடந்துள்ளது என முதல்கட்ட புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது.

### இலங்கை கடற்படையால்

# 10 ராமேஸ்வரம் மீனவர்கள் கைது

**ராமேஸ்வரம், ஜன. 14-**



10 ராமேஸ்வரம் மீனவர்கள் மற்றும் ஒரு விசைப்படகை இலங்கை கடற்படை சிறைப்பிடித்து சென்றது.

தமிழகம் மற்றும் புதுவையை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும் மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இந்நிலையில் நெடுந்தீவு பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 10 ராமேஸ்வரம் மீனவர்கள் மற்றும் ஒரு விசைப்படகை, இலங்கை கடற்படை சிறைப்பிடித்து சென்றதாகவும், யாழ்ப்பாணம் மீன்வளத் துறை அதிகாரிகளிடம் மீனவர்கள் ஒப்படைக்கப்பட இருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தது அவர்களது குடும்பத்தினரையும், மீனவ மக்களையும் மிகுந்த சோகம் அடைய செய்துள்ளது. இலங்கை கடற்படை அத்துமீறி நடவடிக்கை எடுத்து மீனவர்களை கைது செய்து இருப்பதாகவும், எனவே அவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

# ஈரான் மீது அமெரிக்க படைகள் வான்வழி தாக்குதல் நடத்தலாம்

## வெள்ளை மாளிகை தகவலால் பரபரப்பு

**வாஷிங்டன், ஜன. 14-**

ஈரானுக்கு எதிராக தேவைப்பட்டால் ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அதிபர் ட்ரம்ப் பயப்படமாட்டார் என்று வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.

ஈரான் நாட்டில் வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ள பணவீக்கம், அதன் தொடர்ச்சியாக அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்க நிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந்தேதி தொடங்கிய மக்களின் போராட்டம், ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் 16-வது நாளாக நேற்றும் நீடித்தது. வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், ஈரான் பற்றிய கேள்விக்கு பதிலளித்த வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட், ஈரான் விவகாரத்தில் அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்துவதும் ஒன்று என்றார். எனினும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே எப்போதும், ட்ரம்பின் முதல் தேர்வாக இருக்கும் என கூறினார். நீங்கள் ஈரான் அரசின் செயல்பாடுகள் பற்றி வெளிப்படையாக கேள்விப்பட்டு வரும் விசயத்தில் இருந்து, அமெரிக்க அரசுக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்து வரும் விசயங்கள் முற்றிலும் வேறானவை. அவற்றை வெளியிட ட்ரம்ப் ஆர்வத்துடன் இருக்கிறார் என்றே நான் நினைக்கிறேன் என்றார். எனினும், தேவைப்பட்டால் ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ட்ரம்ப் பயப்படமாட்டார் என்றும் அவர் கூறினார்.

### சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும்:

# பொங்கல் திருநாளை முன்னிட்டு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து



சென்னை, ஜன. 14-

அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்று பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக மக்களுக்கு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:- உலகெங்கும் வாழும் தமிழர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இனிய பொங்கல் திருநாளில், அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் அனைவரும் பொங்கல் திருநாளின் முதல் பண்டிகையாக, போகிப் பண்டிகை தொடங்கி, தைப் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் (உழவர் திருநாள்) என 4 நாட்கள் விமரிசையாகக் கொண்டாடி மகிழ்வார்கள்.

இந்த இனிய பொங்கல் திருநாளில், மக்கள் தங்களது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக, வீட்டினுள்ளும், வாசலிலும் வண்ணக் கோலங்களினால் அலங்கரித்து, கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதமாக நெற்கதிர், கரும்பு, வாழை, இஞ்சி, மஞ்சள் உள்ளிட்ட விளை பொருட்களை வைத்து, புதுப்பானையில் அரிசியிட்டு, அது பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்' என்று உற்சாக குரலெழுப்பி இறைவனுக்குப் படைத்து வழிபடுவதோடு, தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளை அலங்கரித்து, பொங்கல் மற்றும் வாழைப் பழங்கள் உள்ளிட்ட உணவுகளை வழங்கி, தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்து பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

உழவர்கள், தங்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களில் பல்வேறு நலத் திட்டங்கள் தீட்டப்பட்டு சிரிய முறையில் செயல்படுத்தப்பட்டதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில், தமிழக மக்கள் அனைவரும் எல்லா நலமும், வளமும் பெற்று சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது தூய வழியில் மனதார வாழ்த்தி, மக்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கிக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### ஜனநாயகன் பட விவகாரம்:

# தமிழ் கலாச்சாரத்தின் மீதான தாக்குதல்: ராகுல் குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஜன. 14-

ஜனநாயகன் பட விவகாரம், தமிழ் கலாச்சாரத்தின் மீதான தாக்குதல் என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ஜனநாயகன் பட விவகாரத்தில் விஜய்க்கு காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி ஆதரவு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறப்பட்டுள்ளதாவது:- 'ஜன நாயகன்' திரைப்படத்தை தடுக்க மத்திய அரசு மேற்கொண்ட முயற்சி தமிழ் கலாச்சாரத்தின் மீதான தாக்குதலாகும். தமிழ் மக்களின் குரலை அடக்குவதில் நீங்கள் ஒரு போதும் வெற்றி பெற மாட்டீர்கள் மிஸ்டர் மோடி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் உச்சத்தில் தங்கம் விலை

சென்னை, ஜன. 14-

சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,170-க்கும், சவரனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு சவரன் 1,05,360-க்கும் புதிய உச்சம் தொட்டு விற்பனையானது. கடந்த 11 நாட்களில் மட்டும் வெள்ளி கிலோவுக்கு ரூ.35 ஆயிரம் அதிகரித்துள்ளது.

தங்கத்துக்குப் போட்டியாக வெள்ளி விலை நேற்று முன்தினம் ஒரு கிலோவுக்கு ரூ. 12,000 கூடியிருந்த நிலையில், இன்று (ஜன.13) ஒரேநாளில் கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 292-க்கும், ஒரு கிலோவுக்கு ரூ.5,000-ம் உயர்ந்து ஒரு கிலோ ரூ.2,92,000 என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது. இதே வேகத்தில் உயரும்பட்சத்தில் இன்னும் ஓரிரு நாள்களில் இதுவரை இல்லாத வகையில் கிராம் ரூ. 300 என்ற புதிய உச்சத்தையும் வெள்ளி எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பதற்றம், அமெரிக்காவின் வரிவிதிப்பு, ஈரான் போர்ப்பதற்றம் உள்ளிட்டவற்றால் தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள விலையேற்றம் இல்லத்தரசிகள் மற்றும் மக்களிடையே மீண்டும் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் தொடர்ந்து அதிகரித்து உச்சத்தை எட்டியுள்ளது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், ஒரு கிலோ வெள்ளி நேற்று ரூ.5,000 அதிகரித்து ரூ.2,92,000க்கும், கிராமுக்கு ரூ.5 அதிகரித்து ஒரு கிராம் ரூ.292க்கும் விற்பனையானது.

வெள்ளி கடந்த 3-ந்தேதி ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 57 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது. இது கடந்த 11 நாட்களில் மட்டும் ரூ.35 ஆயிரம் எழுச்சியடைந்து இருக்கிறது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை 2026-னை வெளியிட்டார்.

### சென்னை சங்கமம் - 2026 நிகழ்ச்சி:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று துவக்கி வைக்கிறார்

சென்னை, ஜன. 14-

பொங்கல் திருவிழாவையொட்டி, தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளைப் பறைசாற்றும் வகையில் சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (ஜன. 14) மாலை 6 மணிக்கு தொடக்கி வைக்கிறார்.

சென்னையில்ஆண்டுதோறும் தை மாதம் சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா என்ற நிகழ்ச்சி கடந்த 4 ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு கலை நிகழ்ச்சிகளை இன்று (ஜன.14-ம் தேதி) மாலை 6 மணிக்கு எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார். தமிழ்நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. சென்னையில் 20 இடங்களில் ஜன.15 முதல் 18-ஆம் தேதி வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:- சாதி பேதமற்ற சமத்துவப் பொங்கல் தமிழ்நாடெங்கும் பொங்கட்டும். கட்சியினர் பொங்கல் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கோலப் போட்டிகளை எழுச்சியோடு நடத்திப் பரிசுகள் வழங்கிடுங்கள்.

சென்னை சங்கமம் 2026 கலைவிழாவைச் சென்னையில் (இன்று) தொடங்கி வைக்கிறேன். 2026 பொங்கல் மகிழ்ச்சிப் பொங்கலாக, திராவிடப் பொங்கலாக, நமக்கு வெற்றிப் பொங்கலாகப் பொங்கட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஒருநாள் பயணமாக தமிழகம் வந்த

# ராகுல் காந்தி பொங்கல் விழாவில் பங்கேற்றார்

நீலகிரி, ஜன. 14-

தமிழக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பங்கேற்றார்.

தமிழர் திருநாளான தை முதல்நாள் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் நாளை (15ம் தேதி) பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. இதனிடையே, பொங்கல் பண்டிகையையொட்டி அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் பொங்கல் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி நேற்று தமிழகம் வந்தார். கர்நாடகாவில் இருந்து ஹெலிகப்டர் மூலம் நீலகிரி மாவட்டத்திற்கு ராகுல் காந்தி நேற்று வந்தார். கூடலூரில் உள்ள தனியார் பள்ளியின் பொன் விழா நிகழ்ச்சியில் பங்கேற்கும் ராகுல் காந்தி மாணவ-மாணவியர் மத்தியில் உரையாற்றுகிறார்.



இதனை தொடர்ந்து பள்ளியின் அருகே காங்கிரஸ் கட்சி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொங்கல் விழாவில் ராகுல் காந்தி பங்கேற்றர். தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டை அணிந்து ராகுல் காந்தி பொங்கல் விழாவில் பங்கேற்றார். இந்த பொங்கல் விழாவில் 108 பெண்கள் மண் பானையில் பொங்கல் வைத்தனர். இந்த விழாவில் மாணவ, மாணவியர், பெண்கள் உள்பட 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

# துணை ஜனாதிபதி இன்று திருப்பூர் வருகை

## மாநகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு


திருப்பூர், ஜன. 14-

இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், இன்று தனது சொந்த ஊரான திருப்பூருக்கு வருகிறார்.

டெல்லியில் இருந்து விமானம் மூலம் கோவை வருகை தரும் அவர், இன்று மாலை காரில் திருப்பூர் பிச்சம்பாளையத்தில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு வருகிறார்.

பின்னர் இரவு அங்கு தங்குகிறார். நாளை (வியாழக்கிழமை) காலை திருப்பூர் பி.என்.ரோடு கணக்கம்பாளையம் பிரிவில் உள்ள தனது உறவினர் வீட்டு புதுமனை புகுவிழா மற்றும் பொங்கல் விழாவில் பங்கேற்கிறார்.

அதன்பின்னர் மதியம் 2 மணி அளவில் அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு, கோவை கொடிசியாவில் நடக்கும் நிகழ்ச்சியில் துணை ஜனாதிபதி பங்கேற்கிறார். இதைத்தொடர்ந்து அன்று மாலை விமானம் மூலம் டெல்லி புறப்படுகிறார். துணை ஜனாதிபதி திருப்பூர் வருகையையொட்டி திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் நேரடி மேற்பார்வையில் இரண்டு துணை கமிஷனர்



கள், 4 உதவி கமிஷனர்கள், 10 இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் 800-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

திருப்பூர் மாநகரில் உள்ள லாட்ஜுகள், தங்கும் விடுதிகளில் நேற்று இரவு முதல் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அங்கு யாராவது சந்தேகப்படும்படியாக தங்கி உள்ளார்களா? என விசாரணை நடத்தினர்.

மேலும் சந்தேகப்படும்படியாக யாராவது தங்கி இருந்தால் உடனடியாக அருகில் உள்ள போலீஸ் நிலையங்களுக்கு தகவல் தெரிவிக்கவும் லாட்ஜ் உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

மேலும் மாநகர முழுவதும் போலீசார் தீவிர வாகன சோதனையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

### கரூர் சம்பவம் தொடர்பாக மீண்டும் விசாரணை:

# டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் ஜன.19-ல் விஜய் ஆஜராக சம்மன்

புது டெல்லி, ஜன. 14-

கரூர் கூட்ட நெரிசல் பலி சம்பவம் தொடர்பாக, தவெக தலைவர் விஜய்யை ஜன.19 ஆம் தேதி டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமையகத்தில் மீண்டும் விசாரணைக்கு அழைக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 27 அன்று கரூரில் நடைபெற்ற தவெக அரசியல் பிரசார நிகழ்வின் போது ஏற்பட்ட பேரணியின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்த வழக்கை சி.பி.ஐ. வசம் உச்சநீதிமன்றம் ஒப்படைத்ததை தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சி.பி.ஐ. விசாரணையைக் கண்காணிக்க, உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் மூன்று பேர் கொண்ட மேற்பார்வைக் குழுவையும் உச்சநீதிமன்றம் அமைத்தது.

இதைத்தொடர்ந்து கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக தவெக நிர்வாகிகள் என்.ஆனந்த் மற்றும் ஆதவ் அர்ஜுனா போன்ற தவெக நிர்வாகிகளிடமும் விசாரணை நடத்தப்பட்ட நிலையில், தற்போது விஜய் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சி.பி.ஐ. சம்மனைத் தொடர்ந்து விசாரணைக்காக விஜய் திங்கள்கிழமை காலை தனி விமானம் மூலம் சென்னையில் இருந்து புறப்



பட்டு, காலை 10.25 மணியளவில் டெல்லி விமான நிலையம் வந்தடைந்தார். பாதுகாப்புக்கிடையே டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமையகத்திற்கு வந்தார். தேவையான நடைமுறைகள் முடிந்த பிறகு, அவர் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சி.பி.ஐ.யின் சிறப்பு குற்றப்பிரிவு பிரிவின் குழு விஜயிடம் விசாரணை மேற்கொண்டனர்.

சி.பி.ஐ. விசாரணை குழுவால் தயாரிக்கப்பட்ட கேள்வித்தாள் விஜய்யிடம் வழங்கப்பட்டு, அதற்கு எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் அளிக்குமாறு கேட்கப்பட்டதாக வட்டாரங்கள் தெரிவித்தன. அவருக்கு உதவுவதற்காக அந்தக் குழுவிலிருந்து ஒரு சுருக்கெழுத்தாளரும் நியமிக்கப்பட்டார். விஜய் தனது வழக்கறிஞரின் உதவியுடன் நிதானமாக பதில் அளித்தார். விஜய் பதில்கள் எழுத்துப் பூர்வமாகவும், விடியோவாகவும் பதிவு செய்து கொண்டனர்.

விசாரணை குழுவில் இருந்த ஒரு டிஎஸ்பி நிலை அதிகாரி, இரண்டு ஆய்வாளர்கள், இரண்டு உதவி ஆய்வாளர்கள் மற்றும் பிற காவலர்களின் ஆதரவுடன் விஜயிடம் விசாரணை நடத்தினார். சி.பி.ஐ. அலுவலகக் கட்டடத்தைச் சுற்றிலும், விமான நிலையத்திலிருந்து சி.பி.ஐ. அலுவலகம் வரையிலான விஜயின் பயணப் பாதையிலும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தன.

திங்கள்கிழமை காலை 11.29 மணிக்கு சி.பி.ஐ. தலைமையகம் வந்த விஜய் 6 மணி நேரங்களுக்கு பிறகு விசாரணை நிறைவடைந்து 6.15 மணிக்கு அங்கிருந்து வெளியேறினார். முதற்கட்ட விசாரமை முடிவடைந்த நிலையில், தற்போது தனி விமானத்தில் சென்னை புறப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், விஜய்யிடம் ஜன.19 ஆம் தேதி சி.பி.ஐ. மீண்டும் விசாரணைக்கு அழைக்கவுள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். இந்த வழக்கில் விஜய்யிடம் விசாரணை நடத்தப்பட்ட அதே நேரத்தில் தமிழக சட்டம்- ஒழுங்கு ஏடி.ஜி.பி. மற்றும் தற்போதைய ஆயுதப்படை டி.ஜி.பி. எஸ். டேவிட்சன் தேவாசீர்வாதம் மற்றும் ஐஜி நிர்மல் குமார் ஜோஷி ஆகியோரிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் திங்கள் கிழமை 6 மணி நேரத்திற்கு மேல் விசாரணை நடத்தினர்.

### முன்பதிவில்லாத டிக்கெட்களை எடுக்க

# ரயில் ஒன் செயலியை பயன்படுத்தினால் இன்று முதல் 3 சதவீதம் கட்டண சலுகை

சென்னை, ஜன. 14-

முன்பதிவில்லாத டிக்கெட்களை எடுக்க ரயில் ஒன் செயலியை பயன்படுத்தினால் இன்று முதல் 3 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வேயில் முன்பு தனித்தனியாக இருந்த ஐ.ஆர்.சி.டி.சி , யூ.டி.எஸ், என்.டி.இ.எஸ் போன்ற பல செயலிகளின் சேவைகளை ஒருங்கிணைத்து ரயில்வே அமைச்சகம் 'ரயில் ஒன்' என்ற செயலியை அறிமுகம் செய்தது.

இந்த செயலியின் மூலம் முன்பதிவு டிக்கெட், முன்பதிவில்லாத டிக்கெட், பிளாட்பார டிக்கெட், ரயில் வரும் நேரம், புறப்படும் நேரம் ஆகியவற்றை தெரிந்து கொள்ள முடியும். ரயில்வே துறை மற்றும் ரயில் நிலையங்கள், ரயில் பெட்டிகளில் உள்ள குறைகள் குறித்து புகார் தெரிவிக்க முடியும். சீசன் டிக்கெட்டும் இந்த செயலி மூலம் பெற முடியும். இந்நிலையில் ரயில் ஒன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுப்பவர்களுக்கு 3 சதவீத கட்டண சலுகையை ரயில்வே அறிவித்துள்ளது. அதாவது, ரயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்ட்டர் கூட்டத்தில் முண்டியடித்து செல்வதற்கு பதிலாக செல்போன் செயலி மூலம் டிக்கெட் எடுப்பதை ஊக்குவிக்க இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த கட்டண சலுகை கியூ.ஆர். கோடு மூலம் கட்டணம் செலுத்துபவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்தது. தற்போது முன்பதிவில்லாத சாதாரண டிக்கெட்டுகளை ரயில் ஒன் செயலி மூலம் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துபவர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆர்-வாலட் மூலம் பணம் செலுத்துபவர்களுக்கு டிக்கெட் கட்டணத்தில் 3 சதவீதம் திரும்ப பெறும் நடைமுறையில் எந்த மாற்றமும் இல்லை. எனவே, ரயில் ஒன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் எடுக்கும் அனைத்து பயணிகளுக்கும் இன்று முதல் வருகிற ஜூலை மாதம் 14-ந் தேதி வரை 3 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்படுகிறது.

தென்னக ரயில்வே மண்டலம் தற்போது 29.5 சதவீதம் செல்போன் செயலி மூலம் முன்பதிவில்லாத டிக்கெட் வழங்கி சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே சாதாரண டிக்கெட்டுகளுக்கு யூ.டி.எஸ். செயலி பயன்படுத்துபவர்கள் ரயில் ஒன் செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் டிக்கெட் எடுக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனால், செல்போனில் டிக்கெட் பதிவு செய்தும், முழுமையடையாமலும், அது குறித்த தகவல் கிடைக்கப்பெறாததாலும், அபராதம் செலுத்துவதில் இருந்து தப்பிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

**வாக்களிப்பது நமது கடமை**

# புதுச்சேரியில் பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம் வழங்கப்படுகிறது

## துணை நிலை கவர்னர் உத்தரவு

புதுச்சேரி, ஜன. 14-

புதுச்சேரி மாநிலத்தில் பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு ஆகியவையும், இலவச வேட்டி, சேலை ஆகியவையும் இடம் பெறும். இதுதவிர இந்த ஆண்டு கையில் ரொக்கமாக 3,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கிடையே, புதுச்சேரியில் ரேஷன் அட்டைகளுக்கு ரொக்கம் வழங்க திட்டமிடப்பட்டது. அங்கு நேரடியாக வங்கி கணக்கில் வரவு வைக்கும் திட்டம் தான் அமலில் இருக்கிறது. அதன்படி, 2026ம் ஆண்டு பொங்கலுக்கு 4,000 ரூபாய் வழங்கலாம் என்று முதல் மந்திரி ரங்கசாமி ஏற்கனவே அறிவித்தார்.

இதற்காக ரூ.140 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும் என்று துணை நிலை கவர்னரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் போதிய நிதி இல்லை என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து கவர்னரை நேரில் சந்தித்து பேசினார்.

அதில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்ட நிலையில் பொங்கல் பரிசில் சிறிய மாற்றம் செய்துள்ளனர். அதன்படி, புதுச்சேரியில் ரேஷன் அட்டைகளுக்கு 3,000 ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. அதாவது, புதுச்சேரியில் பொங்கல் பரிசாக ரூ.3,000 வழங்க துணை நிலை கவர்னர் கைலாஷ்நாதன் உத்தரவிட்டு உள்ளார். இந்த உதவித்தொகை விரைவில் பயனாளிகள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்று நிதித்துறை செயலாளர் அறிவித்துள்ளார்.

### ஜன நாயகன் தணிக்கைச் சான்று:

# பொங்கல் அன்று சுப்ரீம் கோர்ட் விசாரணை

புதுடெல்லி, ஜன. 14-

ஜன நாயகன் திரைப்படத்தின் தணிக்கைச் சான்றிதழ் விவகாரம் தொடர்பான மேல்முறையீட்டு மனுவை வியாழக்கிழமை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு எடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, தவெக தலைவர் விஜய் நடிப்பில் உருவான ஜன நாயகன் திரைப்படம் ஜனவரி 9 ஆம் தேதி வெளியாக இருந்தது. ஆனால், தணிக்கைச் சான்றிதழ் கிடைக்காததால் தள்ளிப் போனது. தணிக்கைச் சான்றிதழ் வழங்க உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் படத்தின் தயாரிப்பு நிறுவனமான கே.வி.என். புரொடக்சன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த தனி நீதிபதி பி.டி.ஆஷா, உடனடியாக யு/ஏ தணிக்கைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அமர்வில் தணிக்கை வாரியம் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது. இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி அமர்வு, தனி நீதிபதியின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்து, வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணையை ஜன. 21 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர். சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வின் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் படத்தின் தயாரிப்பு நிறுவனம் அவசர வழக்கை தாக்கல் செய்தது. இந்த நிலையில், மேல்முறையீட்டு மனுவை வருகின்ற வியாழக்கிழமை பொங்கல் அன்று சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு எடுக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



அரசாங்கம் எல்லாவற்றையும் செய்யும் என்று மக்கள் எதிர்பார்க்கக்கூடாது. சில கட்சிகள் தேர்தலுக்காக இலவசங்களை வாரி வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், அத்தகைய அரசியல் நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். பிரதமர் மோடி ஒருபோதும் தற்காலிகமான இலவச வாக்குறுதிகளை அளிப்பதில்லை.

- பியூஷ் கோயல்



மத்திய பா.ஜ.க. அரசிடம் இலங்கை கடற்படையின் செயலை தடுத்து நிறுத்துமாறு எத்தனைமுறை கூறினாலும் அதை கண்டுகொள்ளாமல் இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கைபதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண வேண்டும்.

- செல்வப்பெருந்தகை



தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை வெறும் ரூ. 81 மட்டுமே உயர்த்தப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் கடந்த ஆண்டில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான இழப்பீட்டை ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் என்ற அளவில் உழவர்களுக்கு முதல்வர் வழங்க வேண்டும்.

- அன்புமணி



அண்ணாமலையின் பேச்சை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை. அவர் வேறு மாநிலத்தை சேர்ந்தவர். அவருக்கு இந்தி சரியாக தெரியாது. அவர் இந்தி பேச முயற்சி செய்கிறார். ஆனால் அவர் பேசியதை பிரதமர் மோடி கூறியது போல தாக்கரே சகோதரர்கள் தீவரமாக எடுத்துக்கொள்ள வேண்டியது இல்லை.

- தேவேந்திர பட்னாவிஸ்

### வத்தலக்குண்டு அருகே

# தேவரப்பன்பட்டியில் ஊராட்சி மன்ற புதிய கட்டிடத்தை அமைச்சர் திறந்தார்



**வத்தலகுண்டு, ஜன. 14-**
திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி அருகே யுள்ள தேவரப்பன்பட்டி ஊராட்சியில் உள்ள புதிய ஊராட்சி மன்ற கட்டித்தை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்து வைத்தார்.

தேவரப்பன்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.31.40 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஊராட்சி மன்ற கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த கட்டிடத்தை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ், தேவரப்பன்பட்டி ஊராட்சி மன்ற செயலாளர் சிவராஜன், சித்தரேவு ஊராட்சி மன்ற செயலாளர் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும் இடத்தில் அமைச்சர் ஆய்வு



**அலங்காநல்லூர், ஜன.14-**
உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா வருகின்ற 17ம் தேதி சனிக்கிழமை நடைபெற உள்ளது. இதையொட்டி அதற்கான முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட கலெக்டர் பிரவீன் குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், சோழவந்தான் தொகுதி வெங்கடேசன், எம் எல் ஏ ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

சமயநல்லூர் டி.எஸ்.பி. ஆனந்தராஜ், ஜல்லிக்கட்டு விழா குழுவினர், வருவாய்த் துறையினர், பேரூராட்சித் துறையினர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இரண்டு அடுக்கு பாதுகாப்பு வேலி, காளைகள் மருத்துவ பரிசோதனை செய்யும் இடம், வீரர்கள் மருத்துவ பரிசோதனை செய்யும் இடம், பார்வையாளர்கள் அமரும் கேலரி, காளைகள் சேகரிக்கும் இடம், பாதுகாப்பு ஏற்பாடுகள், உள்ளிட்ட பல்வேறு இடங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது பேரூராட்சி செயல் அலுவலர்கள் சிவக்குமார், சசிகலா, மாவட்ட அவை தலைவர் பாலமேடு பாலசுப்பிரமணியன், விழா குழு தலைவர் ரகுபதி, பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், சுமதி பாண்டியராஜன், துணைத்தலைவர்கள் சுவாமிநாதன், ராமராஜ் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர். இதே போல் பாலமேட்டில். 16-ந்தேதி ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளது. இதையொட்டி அங்குள்ள வாடிவாசல், பார்வையாளர்கள் அமரும் மாடம், காளைகள் வெளியில் வந்து சேரும் இடம் ஆகியவற்றையும் அமைச்சர் மூர்த்தி மற்றும் அதிகாரிகள் சென்றுஆய்வு செய்தனர். அப்போது அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# பெரிய கோட்டை அரசு பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டி



**ஒட்டன்சத்திரம், பிப். 14-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் பெரியகோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின்பேரில் பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காளியப்பன் தலைமையில் நடைபெற்றது.

மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மலர்விழி செல்வி, தலைமை ஆசிரியர் கர்ணன், ஆசிரியர் செல்வராஜ், முன்னாள் ஆசிரியர் முத்தப்பன் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# நத்தம் அரசு கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா



**நத்தம், ஜன. 14-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதற்கு கல்லூரி முதல்வர் ராஜாராம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் கோலங்கள் போடப்பட்டு கரும்புகளுடன் பொங்கல் வைத்து சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து தமிழரின் பாரம்பரிய உடைகள் அணிந்து பேராசிரியர்களும், மாணவ,மாணவிகளும் ஒருவருக்கொருவர் பொங்கல் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். பின்னர் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

இதில் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.




**முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆணையாளர் ஜானகி தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலர் பாலதண்டாயுதம் முன்னிலையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. இதில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.**

### ட்ரீம் டெக்னாலஜியின் குடியரசு தின சலுகைகள்:

## அமேசான் ஸ்மார்ட் ஹோம் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தயாரிப்புகளுக்கு 72% வரை தள்ளுபடி

**சென்னை, ஜன 14-**
உலகளாவிய பிரீமியம் ஸ்மார்ட் ஹோம் உபகரண நிறுவனமான ட்ரீம் டெக்னாலஜி, குடியரசு தினத்தை முன்னிட்டு அமேசான் இந்தியாவில் நடைபெறும் "கிரேட் ரிபப்ளிக் டே" விற்பனை விழா (ஜனவரி 16–22) மூலம் அதன் தயாரிப்புகளுக்கு அதிகபட்சம் 72% வரை தள்ளுபடி வழங்குகிறது. ரோபோடிக் வாக்கும், கம்பியில்லா ஸ்டிக் வாக்கும், வெட் & ட்ரை கிளீனர்கள் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தயாரிப்புகள் இந்த சலுகையில் இடம்பெறுகின்றன.இந்த குறுகிய கால சலுகை அமேசான் இந்தியா தளத்திலும், நாடு முழுவதும் 20-க்கும் மேற்பட்ட நகரங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட குரோமா ஸ்டோர்களிலும் கிடைக்கிறது. அன்றாட வாழ்க்கையை எளிதாக்கும் அறிவுசார்ந்த தொழில்நுட்பங்களை நுகர்வோருக்கு எளிதாக அணுகக்கூடியதாக மாற்றுவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

மேலும், 60-க்கும் மேற்பட்ட குரோமா ஸ்டோர்களில் அமைக்கப்பட்டுள்ள ட்ரீம் ஜோன்ஸ் மூலம் நேரடி டெமோக்களையும் வாடிக்கையாளர்கள் அனுபவிக்கலாம். இதுகுறித்து ட்ரீம் டெக்னாலஜி இந்தியாவின் மேலாண்மை இயக்குநர் மனு சர்மா கூறுகையில், புதிய தொடக்கங்கள் என்பது வாழ்க்கையை எளிதாக்குவதிலிருந்தே ஆரம்பமாகிறது. புதிய ஆண்டில் நுகர்வோர் எங்களின் ஸ்மார்ட் லிவிங், கிளீனிங் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு தீர்வுகளை சிறந்த மதிப்பு, சேவை மற்றும் நீண்டகால ஆதரவுடன் மேலும் எளிதாக அணுகும் வகையில் இந்த சலுகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

## பொங்கல் பண்டிகை பயணத்தை முன்னிட்டு தமிழகத்தில் பேருந்து முன்பதிவுகள் 81% அதிகரிக்கும்: ரெட்பஸ் கணிப்பு

**சென்னை, ஜன 14-**
பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் நகரங்களுக்கு இடையிலான பேருந்து பயணங்கள் கணிசமாக அதிகரித்து வருகின்றன. ரெட்பஸ் தளத்தின் முன்கணிப்பு தரவுகளின்படி, 2026 பொங்கல் காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து மேற்கொள்ளப்படும் பேருந்து முன்பதிவுகள் 81 சதவீதம் வரை உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்\த பகுப்பாய்வு, 2026 ஜனவரி 9–18 காலகட்ட முன்பதிவுகளை கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.இந்த அதிகரிப்பு, பண்டிகைக்காக வீடு திரும்பும் பயணங்கள், குடும்ப சந்திப்புகள் மற்றும் குறுகிய தூர ஓய்வு சுற்றுலா பயணங்கள் அதிகரித்திருப்பதை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, பயணிகள் முன்கூட்டியே திட்டமிட்டு, இன்டர்சிட்டி பேருந்து சேவைகளை அதிகம் தேர்வு செய்கிறார்கள் என்பதையும் இந்த தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. சென்னை-பெங்களூர், கோயம்புத்தூர்–பெங்களூர், சென்னை–மதுரை போன்ற வழித்தடங்களில் அதிக பயண நெரிசல் பதிவாகியுள்ளது. இதுகுறித்து ரெட்பஸ் நிறுவனத்தின் பேச்சாளர் கூறுகையில், பொங்கல் பண்டிகை என்பது குடும்பங்கள் ஒன்றிணையும் முக்கிய தருணம். இந்த காலகட்டத்தில் பேருந்துகள் பாதுகாப்பான, வசதியான மற்றும் நம்பகமான பயணத் தேர்வாக தொடர்ந்து திகழ்கின்றன. அதிகரித்து வரும் தேவையை கருத்தில் கொண்டு, பயணிகள் எளிதாகவும் குறைந்த செலவிலும் பயணங்களை திட்டமிட டிஸ்கவர் பாரத் போன்ற சிறப்பு சலுகைகளை வழங்கி வருகிறோம் என்று கூறினார்.

## பார்ட்னர் இந்திய இருசக்கர வாகனங்களுக்கு உண்மையான உதிரிபாகங்களை அறிமுகம் செய்தது

**சென்னை, ஜன 14-**
இந்திய இருசக்கர வாகன எதிர்கால சந்தையை உறுதிப்படுத்தும் வகையில், பார்ட்னர் நிறுவனம் உண்மையான ஐசிஇ மற்றும் இவி உதிரிபாகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் போலி பொருட்கள், தரத்தில் மாற்றம் உள்ள உதிரி பாகங்கள் மற்றும் சீரற்ற விநியோக வலையமைப்புகள் போன்ற சவால்களை சமாளிக்கும் திறன் உள்ளது. பார்ட்னர் ஜென்யூன் வரம்பு ஓஇஎம் தரத்திலான உற்பத்தியாளர்களிடம் இருந்து பெறப்பட்டு, உண்மை வாழ்க்கை மெக்கானிக் சோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.பார்ட்னர் நிறுவனம் ஐசிஇ மற்றும் இவி இருசக்கர வாகனங்களுக்கு உடனடி கிடைப்புத் திறன், சரியான பொருத்தம் மற்றும் நம்பகமான தரத்தை வழங்கும் மெக்கானிக்-மையமான எதிர்காலம் வலையமைப்பை உருவாக்கியுள்ளது.

புதிய தயாரிப்புகள் பார்ட்னர் ஆப், பார்ட்னர்.இன் மற்றும் அமேசான் தளங்களின் வாயிலாக வொர்க்ஷாப் களுக்கு விரைவான, நேரடி அணுகல் வழங்குகின்றன.எதிர்கால சந்தையில் மெக்கானிக்குகளுக்கு நீண்டகால கிடைப்புத் தன்மையும் நம்பிக்கையும் வழங்குவதே எங்களின் நோக்கம் என்று பார்ட்னர் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி விஷால் துபே தெரிவித்துள்ளார். பார்ட்னர் ஜென்யூன் ஸ்பேர்ஸ் & லூப்ரிகண்ட்ஸ் மூலம், ஐசிஇ மற்றும் இவி உதிரி பாகங்களுக்கு ஒரே மாதிரியான, மெக்கானிக் சோதனை பெற்ற விநியோகத்தை கொண்டு வருகிறோம்.இதன் மூலம் வொர்க்ஷாப் கள் தரம் குறித்த சந்தேகங்களை விட்டு உற்பத்தித்திறன் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை மேம்படுத்த முடியும்.

## திருமங்கலம் பிரதான கால்வாயில் தண்ணீர் திருட்டை தடுத்திட விவசாயிகள் கோரிக்கை

**திருமங்கலம், ஜன. 14-**
மதுரை மாவட்டம் திருமங்கலம் பிரதான கால்வாயில் தண்ணீர் திருட்டை தடுத்திட காவல்துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என குறை தீர்ப்பு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருமங்கலம் தாலுகா அலுவலகத்தில் மாதாந்திர விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் வட்டாட்சியர் சுரேஷ் பிரெடரிக் கிளமெண்ட் தலைமையில் நேற்று நடைபெற்றது. பல்துறை அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் பேசிய விவசாயிகள், திருமங்கலம் தாலுகாவில் 12 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் பணியாற்றிடும் ஊராட்சி செயலாளர்களை இடமாற்றம் செய்திட வேண்டும்,விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டத்தில் விவசாயிகள் கொடுக்கும் மனுக்களுக்கு ரசீது கொடுத்திட வேண்டும், அதே போல் முறையாக பதில் தந்திட வேண்டும். தற்போது திருமங்கலம் பிரதான கால்வாயில் திறந்து விடப்பட்டுள்ள வைகை தண்ணீர் கடைமடை பகுதிக்கு வந்து சேர்ந்திடும் வகையில் தண்ணீர் திருட்டை தடுத்து நிறுத்தி, கால்வாயை உடைத்தும், ஆயில் மோட்டார்கள் அமைத்து தண்ணீர் திருடுவோர் மீது காவல் துறை மூலம் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என கோரிக்கை விடுத்து பேசினார்கள். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். இக்கூட்டத்தில் உரப்பனூர் பழனி, வாகை பழனிச்சாமி, ஆலம்பட்டி வெள்ளையன், தங்களாச்சேரி பால்பாண்டி, சாத்தங்குடி நல்ல குரும்பன், காங்கேயநத்தம் ராஜேந்திரன், எஸ் கே எம் இயக்க சந்தானம் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## நத்தத்தில் அரசு பேருந்தில் ஸ்டிக்கர் ஒட்டிய நாம் தமிழர் கட்சியினர் கைது

**நத்தம், ஜன. 14-**
நாம் தமிழர் கட்சி சார்பில் அரசு போக்குவரத்து கழகம் என்ற பெயருக்கு முன்னால் தமிழ்நாடு என்ற பெயரை சேர்க்க கோரி ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகிறது. இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ்நிலையத்தில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் மாநில ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் தலைமையில் நேற்று அக்கட்சியினர் பஸ்சை மறித்து தமிழ்நாடு என்ற ஸ்டிக்கரை ஒட்டினர்.

மேலும் பஸ்சில் இருந்த முதல்வர் ஸ்டிக்கரை கிழித்து கோஷங்களையும் எழுப்பினர். தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பாக மண்டல செயலாளர் பிரபாகரன் உள்ளிட்ட 3 பேரை கைது செய்த நத்தம் போலீசார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



**தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம் மஞ்சளாறு அணையிலிருந்து பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கலெக்டர் ரஞ்ஜீத்சிங், தங்கதமிழ்செல்வன் எம்.பி. முன்னிலையில் தண்ணீரை திறந்து வைத்தார்.**

# ராமேஸ்வரம் : மகளிர் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா



**ராமேஸ்வரம், ஜன. 14-**
ராமேஸ்வரம் அருகே அமைந்துள்ள மகளிர் கல்லூரியில் தமிழர் திருநாளான சமத்துவ பொங்கல் விழா நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ராமேஸ்வரம் அருகே பாம்பன் அன்னை ஸ்கொலஸ்டிகா மகளிர் கல்லூரி இயங்கி வருகிறது. இந்த கல்லூரியில் தமிழர் திருநாளாம் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த விழாவுக்கு கல்லூரி முதல்வர் அருட்சகோதரி. ஆனி பெர்பெட் சோபி தலைமை வகித்தார்.விழாவில் மாணவிகள் ஏழு வகையான பொங்கலை சமைத்து தமிழர்களின் பெருமையை பறைசாற்றினர். விழாவில் தொடர்ந்து மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கோலப் போட்டிகள், உரியடி, கயிறு இழுத்தல், நடனம் போன்ற நிகழ்வுகள் நனை பெற் றது. நி கழ்ச் சிக்கான ஏற்பாடுகளை துணை முதல்வர் மோட்ச ராக்கினி மற்றும் பேராசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# அருள் ஆனந்தர் கல்லூரியில் பொங்கல் விழா



**உசிலம்பட்டி, ஜன. 14-**
மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா கருமாத்தூரில் உள்ள அருள் ஆனந்தர் கல்லூரியில் தமிழர் திருநாள் விழா நடைபெற்றது.

ஒவ்வொரு துறை சார்பிலும் மாணவ மாணவிகள் பாரம்பரிய உடையணிந்து பொங்கல் வைத்து தைத் திருநாளை கொண்டாடி வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

அதனை தொடர்ந்து மாணவ மாணவிகளுக்கு இடையே பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான உறியடித்தல், இளவட்ட கல் தூக்குதல், கயிறு இழுத்தல் மற்றும் நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இறுதியில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் கல்லூரி அதிபர் பேசில் சேவியர், கல்லூரி செயலர் தந்தை அந்தோணிசாமி, கல்லூரி முதல்வர் அன்பரசு மற்றும் கல்லூரியின் இணை முதல்வர் சுந்தரராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பொங்கல் விழாவை மாணவ புல தலைவர் கணேஷ் ஒருங்கிணைத்தார்.

### பொங்கல் திருநாளை முன்னிட்டு

# திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில் காய் - கனிகள் படையலுடன் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு



**திருமங்கலம், ஜன. 14-**
பொங்கல் திருநாளை முன்னிட்டு திருமங்கலம் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடும் அங்குள்ள ரஜினியின் மூலவர், உற்சவர் திருவுருவச் சிலைகளுக்கு அபிஷேக ஆராதனைகள் நடத்தி காய்கனிகள் படையலிட்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது.

மதுரை மாவட்டம்,திருமங்கலம் சீயோன் நகர் ரஜினி அவென்யூவில் ரஜினிகாந்தின் தீவிர பக்தரும்,முன்னாள் ராணுவ வீரருமான எஸ்.கார்த்திக் இந்தியாவில் முதல் முறையாக ரஜினிகாந்தின் மூலவர், உற்சவர் சிலைகளுடன் அமைத்துள்ள அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் தினம் தோறும் பூஜைகள் நடைபெற்று வருகிறது. ரஜனி பக்தர்களின் ஆன்மீக வழிபாட்டுத்தலமாக திகழ்ந்திடும் இக்கோவிலில் ரஜினியை குலதெய்வமாக வணங்கிடும் அவரது ரசிகர்கள் தங்களது இல்ல நிகழ்வுகளை இங்கு வந்து வழிபாடு நடத்திய பின்பு துவங்குவதை வழக்கமாக வைத்துள்ளனர். இந்நிலையில் வரும் 15ம் தேதி தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படவுள்ள நிலையில் திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ரஜினி சன்னதியின் முன்பாக நவதானியங்களை வைத்து படையப்பா ரஜினி உருவத்தை வடிவமைத்தும் ,முத்து படத்தில் மாட்டு வண்டியில் ரஜினி காய்கறிகளை ஏற்றி செல்வது போன்றும்,பாரம்பரிய முறைப்படி குடில் போல் வடிவமைத்தும், உற்சவர் சிலை முன் பல்வேறு வகையான காய்கறி மற்றும் கனிகளால் அலங்காரம் செய்து படையலிட்டு,கரும்பு தோரணங்களுடன் வேத மந்திரங்கள் முழங்கிட பாரம்பரிய முறையில் சூப்பர் ஸ்டார் பொங்கல் வைத்து அபிஷேக ஆராதனைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதனை தொடர்ந்து ஸ்ரீ ரஜினி கோவிலில் உள்ள ரஜினியின் மூலவர், உற்சவர் சிலைகளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு அவரது மூலவர் உற்சவர் சிலைகளுக்கு பால்,பன்னீர், புஷ்பம், இளநீர்,தயிர் மற்றும் சந்தனத்தால் அபிஷேகம் செய்து தீபாராதனையுடன் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடைபெற்று வரும் இந்த பொங்கல் விழா நிகழ்வுகளை வேத மந்திரங்கள் முழங்கிட ரஜினியின் தீவிர பக்தரும், முன்னாள் ராணுவ வீரரும், திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனருமான எஸ்.கார்த்திக் மற்றும் அவரது குடும்பத்தினர் முன்னின்று நடத்தினர். இதனிடையே கோவில் நிறுவனர் கார்த்திக் கூறுகையில், இந்த ஆண்டு பொங்கல் மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும், செல்வமும் பொங்கிடும் பொங்கலாக அமைந்திட வேண்டி இங்கு பொங்கலிட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது என்று தெரிவித்தார். மேலும் இந்த பூஜையில் பங்கேற்ற பக்தர்களுக்கு ரஜினி கோவிலின் சார்பில் பொங்கல் பிரசாதமாக வழங்கப்பட்டது.

# தனியார் பள்ளி ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் ராமநாதபுரத்தில் சமத்துவ பொங்கல் முப்பெரும்விழா



**ராமநாதபுரம், ஜன. 14-**

தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் ராமநாதபுரத்தில் சமத்துவ பொங்கல் முப்பெரும் விழா நடந்தது.

தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் சமத்துவ பொங்கல் உள்பட முப்பெரும் விழா ராமநாதபுரம் வேலு மனோகரன் கலை, அறிவியல் கல்லூரியில் நேற்று நடந்தது. கல்லூரி நிறுவனர் வேலு மனோகரன் தலைமை வகித்தார். கல்லூரி செயலர் சுதந்தரா பார்த்தசாரதி, முதல்வர் ரஜனி, தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர்கள் முன்னேற்ற சங்க ஊடகப்பிரிவு அமைப்பாளர் முஹம்மது சலாவுதீன் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர்கள் முன்னேற்ற சங்க பொதுச் செயலர் சதீஷ் வரவேற்றார்.

வனத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசினார். அரசு பொதுத்தேர்வுகளில் 100% தேர்ச்சி அடைந்த பள்ளிகள், சிறந்த ஆசிரியர்கள், கலைத்திறன் போட்டிகளில் வென்றோருக்கு அமைச்சர் பரிசு வழங்கி கவுரவித்தார். இதில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் முன்னேற்ற மாநிலத்தலைவர் ஆனந்த குமார், துணை பொதுச்செயலர் விஜயகுமார், பொருளாளர் வெங்கடாசலபதி, மாவட்ட தலைவர் முனியசாமி, செயலர் நஜ்முதீன், பொருளாளர் பால்ச்சாமி, மாவட்ட துணைத்தலைவர் கருணாநிதி, துணைச்செயலர் நசுருதீன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் உள்ள 25 ஆயிரம் தனியார் பள்ளிகளில் பணியாற்றி வரும் 5.50 லட்சம் ஆசிரியர்கள், இதர பணியாளர்களின் வாழ்வுரிமை பாதுகாக்கவும், வாழ்வாதாரம் மேம்பட தனியார் பள்ளிகள் ஆசிரியர் நல வாரியம் உருவாக்க வேண்டும் தனியார் பள்ளி ஆசிரியர்களின் நலனை பாதுகாக்க தனியார் பள்ளிகள் பாதுகாப்புச் சட்டம் இயற்ற வேண்டும். 2011 ஆண்டுக்கு பின் கட்டப்பட்ட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் நகர் ஊரமைப்பு துறை முன் அனுமதி பெற இயலாததால் குறைந்த தொகை நிர்ணயித்து கல்வி நிறுவனங்களுக்கு முன் அனுமதி அளிக்க வேண்டும். தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்க வேண்டும். இக்கோரிக்கைகளை தேர்தல் அறிக்கையில் இடம் பெற செய்யும் மனுவை அமைச்சர் ராஜகண்ணப்பனிடம் மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒப்படைத்தனர். முன்னதாக சமத்துவ பொங்கல் விழாவில் அமைச்சர் கலந்து கொண்டு மாணவ மாணவிகள் பொங்கல் வைத்ததையும் வண்ண கோலங்களையும் பார்வையிட்டார்.

## ஒட்டன்சத்திரம் சக்தி கல்லூரியில் பொங்கல் விழா



**ஒட்டன்சத்திரம், ஜன. 14-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி கல்வியில் குழுமங்கள் இணைந்து நடத்திய பொங்கல் விழா கல்லூரியின் தாளாளர் மருத்துவர் வேம்பணன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சக்தி கல்வி குழுமத்தின் முதல்வர்கள் தேன்மொழி, ஜானகி தேவி, அசோக் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி வளாகத்தில் மாணவிகள் பொங்கல் பானைகளில் பொங்கல் வைத்து முளைப்பாரி எடுத்து மாவிளக்கு வைத்து பறை நடனம், மயிலாட்டம், பொம்மலாட்டம் ஆகியவற்றுடன் விழா நடைபெற்றது விழாவினை கணினி அறிவியல் துறை தலைவர்கவிதா பேராசிரியர்கள் ஒருங்கிணைப்பு செய்தனர்.

## கேலோ இந்தியா 2026: ஓபன் வாட்டர் நீச்சலில் அனுராக் சிங் மற்றும் அஷ்மிதா சந்திரா தங்கப்பதக்கம் வென்று சாதனை

**சென்னை, ஜன.14-**

ஓபன் வாட்டர் அல்லது கடல் நீச்சல் என குறிப்பிடப்படுவது பொதுவாக சகிப்புத் தன்மையுடன் கூடிய ஆற்றல் மிக்க நீச்சலில் கவனம் செலுத்துகிறது, இது பல தசாப்தங்களுக்கு முன்பு ஆங்கிலக் கால்வாயைக் கைப்பற்றிய மிஹிர் சென் மற்றும் புலா சவுத்ரி போன்றவர்களால் பிரபலப்படுத்தப்பட்டது. அப்போதிருந்து, நீச்சல் ஆர்வலர்கள் அலைகளைத் துணிந்து கடந்து தரம்தரில் இருந்து இந்தியாவின் கேட்வே வரை நீந்தி கடந்து வருகின்றனர், கடலை வென்று, அந்த தூரத்தை நீந்திக் கடந்து சென்ற வயதில் இளையவர் என்ற சாதனையை முறியடித்து தங்களுக்கு என ஒரு பெயரைப் பெற வேண்டும் என்ற நம்பிக்கையில் முயற்சிக்கின்றனர்.

ஆங்கிலக் கால்வாய் 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே நீச்சல் பயிற்சி செய்ய முடியும் என்ற விதியை பிறப்பித்தபோது அந்தக் கனவுகள் நிர்மூலமாகிவிட்டது. பெரும்பாலான பிற பயணங்கள் அந்த விதியைப் பின்பற்றத் தொடங்கின.

மகாராஷ்டிராவின் அணியின் மேலாளர்களில் ஒருவரான நேஹா சப்தே, வயது தொடர்பான விதி அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்பு, ஒன்பது வயதாக இருந்த போது தரம்தரில் இருந்து கேட்வே வரை நீந்திச் சென்றவர்களில் ஒருவர். “அந்த விதியின் காரணமாக, நான் துப்பாக்கிச் சூடும் கலைக்கு மாறினேன், அந்த விளையாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.”

ஆனால் ஓபன் வாட்டர் நீச்சல் இப்போது ஒரு ஒலிம்பிக் போட்டியாக மாறியுள்ளது, இது 2008 பெய்ஜிங் விளையாட்டுப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் கடல் அல்லது ஆற்றில் 10 கிமீ சுற்றுப் பாதையைக் கொண்டதாக உள்ளது. மேலும் இது நீச்சல் குள நீச்சல் வீரர்களை இந்தத் துறைக்கு ஈர்ப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. மேலும் கவனம் இப்போது பயணத்திலிருந்து போட்டிக்கு மாறியுள்ளது.

## அண்ணா நகரில் கவனமீர்க்கும் கோ கலர்ஸ்

**சென்னை, ஜன.14-**

இந்தியாவின் முன்னணி பாட்டம்வேர் பிராண்டான கோ கலர்ஸ் நிறுவனமானது, சென்னையின் மிக முக்கியமான சில்லறை வர்த்தக மையங்களில் ஒன்றான அண்ணா நகரில் தனது புதிய 4,430 சதுர அடி பரப்பளவு கொண்ட முதன்மை ஸ்டோரைத் தொடங்குவதன் மூலம் தென்னிந்தியாவில் தனது இருப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இந்த ஸ்டோரை பிரபல நடிகை ஐஸ்வர்யா லட்சுமி திறந்து வைத்தார். இது கோ கலர்ஸின் துடிப்பான சில்லறை வர்த்தக விரிவாக்கப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது. அண்ணா நகரில் அமைந்துள்ள இந்த ஸ்டோர், முன்பு உள்ளாடைகளை மட்டும் விற்கும் ஒரு கடையாக இயங்கி வந்தது. தற்பொழுது, கோ கலர்ஸ் நிறுவனம் இந்த இடத்தை ஒரு பெரிய முதன்மை ஸ்டோராக மேம்படுத்தி, மேலும் ஆழமான மற்றும் விரிவான ஷாப்பிங் அனுபவத்தை வழங்குகிறது.

“கோ கலர்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி கௌதம் சரோகி கூறுகையில், “அண்ணா நகரில் உள்ள இந்த ஷோரூம் ஆனது கோ கலர்ஸ்-இன் நேரடி ரீடெயில் விற்பனை இருப்பை நாங்கள் எப்படிப் பார்க்கிறோம் என்பதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். அண்ணா நகர் எப்போதும் எங்களுக்கு ஒரு முக்கிய சந்தையாக இருந்து வருகிறது. இந்த ஸ்டோரை ஒரு முதன்மை ஸ்டோராக மேம்படுத்துவது, எங்களின் வளர்ந்து வரும் தயாரிப்புகளின் முழு பன்முகத்தன்மையையும் வெளிப்படுத்த எங்களுக்கு உதவுகிறது. இந்த ஸ்டோர், வாடிக்கையாளர்களின் ஆர்வத்தைத் தூண்டும் மற்றும் நீண்ட கால பிராண்ட் ஈடுபாட்டை ஊக்குவிக்கும் அனுபவ அடிப்படையிலான சில்லறை விற்பனை மையங்களை உருவாக்கும் எங்கள் நோக்கத்தைப் பிரதிபலிக்கிறது.”

## கர்நாடக இசைக்கலைஞர் மீனா சுப்பிரமணியன், பாரதிய வித்யா பவன் வழங்கும் கோவை சுப்ரி முருககான விருதை பெற்றார்

**கோவை, ஜன.14-**

பிரபல கர்நாடக இசைக்கலைஞரும் ஸ்ரீமதி. சங்கீத கலாநிதி எம்.எல்.வி.வசந்தகுமாரியிடம் இசை பயின்றவருமான மீனா சுப்பிரமணியன் பாரதிய வித்யா பவன் சார்பாக கோவை சுப்ரி முருக கான விருது வழங்கப்பட்டது. கோயம்புத்தூரில் நடைபெற்ற 29-வது பொங்கல் இசை விழா தொடக்க நிகழ்ச்சியில், டாக்டர் சௌமியாவுடன் இணைந்து திருமதி மீனா சுப்பிரமணியன் கர்நாடக இசைக்கு அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்காக கௌரவிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டார். மீனா சுப்பிரமணியன், தனது குருவான சங்கீத கலாநிதி எம். எல். வசந்தகுமாரியின் மூத்த சீடர்களில் ஒருவராக, கோயம்புத்தூர் மற்றும் கொங்கு நாட்டில் அறியப்பட்டவர், மேலும் எம்.எல்.வி பாணியை கோயம்புத்தூருக்கு அறிமுகப்படுத்தியவரும் இவரே.மீனா சுப்பிரமணியனுக்கு இந்த விருதை பாரதிய வித்யா பவன், கோயம்புத்தூர் கேந்திரத்தின் தலைவர் என்.வி.நாகசுப்பிரமணியன் வழங்கினார்.

மீனா சுப்பிரமணியன் பெற்ற விருதுகள், மியூசிக் அகாடமி - 1989 மிகவும் நம்பிக்கைக்குரிய கலைஞர்,கிருஷ்ண கான சபா - 1989 ஜி.என்.பாலசுப்பிரமணியன் விருது,தமிழ்நாடு அரசு - 2001 இசை மதுமணி விருது, நவரத்னா விருதுகள் ஆகும்.இது குறித்து அவர் பேசுகையில், கடந்த 50 ஆண்டுகளாக கர்நாடக சங்கீதத்திற்கு மீனா சுப்பிரமணியனின் பங்களிப்பு அபாரமானது என்று கூறினார். அவரது தனித்துவமான மற்றும் அற்புதமான குரல், தெளிவான உச்சரிப்பு, தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் உள்ள அறிவு ஆகியவை அவரது தனிச்சிறப்பு என்றும், அவர் மிக இளம் வயதிலேயே தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளார் என்றும் குறிப்பிட்டார். இந்த விருதானது, தனது இசையின் மூலம் கொங்கு நாட்டில் கர்நாடக சங்கீதத்தை நிலைநிறுத்துவதிலும், எதிர்காலத்திற்காக கர்நாடக சங்கீதத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு வலுவான மாணவ சமூகத்தை உருவாக்குவதிலும் அவர் மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிப்பதாக உள்ளது என்றும் என்.வி.நாகசுப்பிரமணியன் கூறினார்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## நத்தத்தில் பகுதியில் ஆதரவற்றவர்களுடன் பொங்கல் கொண்டாடிய தன்னார்வலர்கள்



**நத்தம், ஜன.14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் ஆதரவற்றோர்களுக்கு தன்னார்வலர்கள் மூலம் தினமும் காலை, இரவு வேலைகளில் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று தன்னார்வலர்கள் மூலம் நத்தம்- வேலம் பட்டி பகுதியில் உள்ள அய்யப்பன் கோவிலில் 25-க்கும் மேற்பட்ட ஆதரவற்றவர்களை அழைத்து வந்து கோவில் முன்பாக கரும்புகளுடன் பொங்கல் வைத்து கொண்டாடப்பட்டது. தொடர்ந்து அவர்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டு சேலைகள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் நத்தம் பகுதியை சேர்ந்த தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
அ.திமு.எண்.5029/2025
A.ராஜா, த/பெ.லேட்.அய்யாவு
வடக்குத்தெரு
பச்சக்கோப்பன்பட்டி கிராமம்
திரளி பிட்-1, திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
------------ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தந்தை S.அய்யாவு,த/பெ.சின்னாண்டி என்பவர் கடந்த 10.10.2001-ம் தேதி மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,திரளி பிட்-1,பச்சக்கோப்பன்பட்டி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் காலை 11.00மணியளவில் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
A.ராஜா
பச்சக்கோப்பன்பட்டி கிராமம்.

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
அ.திமு.எண்.3407/2025
கூடலிங்கம், த/பெ.கூடலிங்கம்
கதவுஎண்.78-A,வேளார் தெரு
மேலக்கோட்டை கிராமம்
திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
------------ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது பாட்டி சீனியம்மாள்,க/பெ.கந்தசாமி நாயக்கர் என்பவர் கடந்த 15.09.1989-ம் தேதி மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,மேலக்கோட்டை கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் காலை 11.00மணியளவில் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
கூடலிங்கம்
மேலக்கோட்டை.

முதன்மை சார்பு நீதிமன்றம்
திண்டுக்கல்
IA.No.03/2025
in
IA.No. 01/2024
in
AS.No. 07/2022
வட்டாட்சியர் நிலக்கோட்டை
வகையறா
... மனுதாரர்கள்/அப்பீல்வாதிகள்
எதிர்
வெங்கடசுப்பிரமணியன்,
S/o.லேட்.கன்னியப்பமுதலியார்,
முதலியார்பேட்டை மேலத்தெரு,
சோழவந்தான் டவுண்,
மதுரை மாவட்டம்.
.....5எதிர்மனுதாரர்கள்/
5,அப்பீல்பிரதிவாதிகள்

மேற்படி நிர் மனுவில் மனுதாரர்கள்/அப்பீல்வாதிகள் தங்கள் மீது மேல்முறையீடு மனு தாக்கல் செய்து அது 21.01.2026-ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே அதில் தாங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் அன்று காலை 10.00 மணிக்கு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளளாம்.

R.K.Ravichandran M.A.,B.L.,
Government
Pleader,Dindigul.

வேடசந்தூர் சப் கோர்ட்டு,
வேடசந்தூர்
O.S.No.181/2023
கனரா பேங்க், பாகாநத்தம்
அதன் கிளை மேலாளர் மூலம்
..... மனுதார் / வாதி
1.திருமதி.மாரியம்மாள்
க/பெ. ராமமூர்த்தி
தங்கமுனியப்பன் மகளிர்
சுயஉதவிக்குழு
புங்கம்பாடி.R.கோம்பை,
வேடசந்தூர் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.
.. 10ம் எதிர்மனுதார்/
10ம் பிரதிவாதி

பொது அறிவிப்பு

மேற்படி நிர் வழக்கில், வாதிக்கு செலுத்த வேண்டிய தொகையை வசூல் செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்திருப்பதில் 10ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் ஷை நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்காக 19.01.2026 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை தேதியில் 10ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஷை தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படிவழக்குஒருதலைப்பட்சமாக திர்மானிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கோ.இளம்பூரணன்,
அட்வகேட், திண்டுக்கல்.

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.4606/2025/ஆ2
முருகன், த/பெ.ராமசாமி
கதவுஎண்.78-A,வேளார் தெரு
அரசரடி, ஆரப்பாளையம்
மதுரை தெற்கு, மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
------------ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தந்தை ராமசாமி தேவர், த/பெ. விருமாண்டி தேவர் என்பவர் கடந்த 16.11.1993-ம் தேதி மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,கீழஉரப்பனூர் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா 05.02.2026ம் தேதி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் காலை 11.00மணியளவில் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
முருகன்
அரசரடி, மதுரை.

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.4607/2025/ஆ2
முருகன், த/பெ.ராமசாமி
கதவுஎண்.78-A,வேளார் தெரு
அரசரடி, ஆரப்பாளையம்
மதுரை தெற்கு, மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
------------ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தாயார் பாண்டியம்மாள்,க/பெ.ராமசாமி என்பவர் கடந்த 21.09.1993-ம் தேதி மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,கீழஉரப்பனூர் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா 05.02.2026ம் தேதி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் காலை 11.00மணியளவில் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
முருகன்
அரசரடி, மதுரை.

தமிழ்நாடு அரசு
**குறிஞ்சிப்பாடி பேரூராட்சி, கடலூர் மாவட்டம்**
ந.க. எண்.830 / 2025 / அ1 ஒப்பந்தபுள்ளி விளம்பரம் நாள் : 12.01.2026

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி தேர்வுநிலை பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025-2026-இன்கீழ் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியை ரூபாய் 152.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல். இப்பணியை மேற்கொள்ள **https://tntenders.gov.in** என்ற வலைதளத்தில் தகுதியுடைய ஒப்பந்ததாரர்கள் **23/01/2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00** மணிக்குள் ஒப்பந்தபுள்ளியை பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்படி பணிக்கு இணையவழி ஒப்பந்தபுள்ளி மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | டேவணி தொகை ரூ | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | குறிஞ்சிப்பாடி பேரூராட்சி மீனாட்சிப்பேட்டை திருவள்ளுவர் நெசவாளர் குடியிருப்பு, சிவதுர்கா நகர் விரிவாக்கம், திலக் நகர் கடலூர் சாலை, குருலிங்கம் சந்து, ரெட்டியார் காலணி மேற்கு விரிவாக்கம், ரெட்டியார் காலணி கிழக்கு விரிவாக்கம், அண்ணா நகர், காமராஜர் நகர், மாருதி நகர் விரிவாக்கம், வெள்ளாளர் தெரு விரிவாக்கம், பாலாஜி நகர் விரிவாக்கம், அலமேலு அம்மாள் நகர் பார்க் சாலைகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 152.00 | 1,52,000/- | 120 நாட்கள் |

23/01/2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்பந்தபுள்ளிகள் இணையவழி வலைதளம் மூலமாக திறக்கப்படும். மேலும் பணி தொடர்பான இதர விவரங்கள் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

தலைவர்
குறிஞ்சிப்பாடி சிறப்புநிலை பேரூராட்சி
கடலூர் மாவட்டம்

செயல் அலுவலர்
குறிஞ்சிப்பாடி சிறப்புநிலை பேரூராட்சி
கடலூர் மாவட்டம்

செ.ம.தொ.இ /201/ ஒப்பந்தப்புள்ளி / 2026

## வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் அரசு திட்ட பணிகளை ஆய்வு செய்தார் மாவட்ட கலெக்டர்

**விருதுநகர், ஜன. 14-**

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு அரசுத் திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தாயில்பட்டி ஊராட்சியில், பொங்கல் திருநாள்-2026 னை முன்னிட்டு, மாவட்ட நிர்வாகம் சார்பில், பொங்கல் வாழ்த்து மடல் அட்டைகளை பொதுமக்களுக்கு வழங்கினார். குடும்ப அட்டைதாரர்களின் வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில், உங்க கனவ சொல்லுங்க படிவங்களை வழங்கி தகவல்களை பெறும் பணிகளை மேற்கொள்ள உள்ள தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டையினை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மேலக்கோதை நாச்சியார்புரம் ஊராட்சி ஒன்றியத்தில் தூய்மைப் பணிகள் (மாஸ் கிளினிங்) மேற்கொள்ளப்பட்ட இடங்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா நட்டு வைத்தார். வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கொங்கன்குளம் ஊராட்சியில் சமூகத்தின் மீதான தொழில் நிறுவனங்களின் பங்களிப்புத்தொகை திட்டத்தின் கீழ் ரூ.60 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட சுகாதார வளாகத்தினை மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா திறந்து வைத்தார். இந்நேர்வில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மரம் மனிதனின் உரம்

கண் தானம் செய்வீர்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)
ஓ.மு.எண் : 9584/2025/அ.3
R.மகாமணி, S/o. ராமு,
பதினெட்டாங்குடி கிராமம்,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
...... மனுதாரர்
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதார் R.மகாமணி என்பவரின் தந்தை சு.ராமு 15.05.1989-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பதினெட்டாங்குடி கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை பதினெட்டாங்குடி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

R. மகாமணி
மனுதாரர்

## மேலூர் நகராட்சி பள்ளியில் புகையில்லா போகி பண்டிகை

**மேலூர், ஜன. 14-**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சியில் உள்ள நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பொங்கல் விழாவை முன்னிட்டு பொதுமக்கள் புகையில்லா போகி பண்டிகை கொண்டாடும் விதமாக பொதுமக்கள் தங்களிடம் உள்ள பழைய துணிகள், ரப்பர், டயர், கழிவு பொருட்களை தீயிட்டு எரிக்காத வண்ணமாக அந்த பொருட்களை மேலூர் நகராட்சி நிர்வாகத்தில் ஒப்படைத்து நமது நகரத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதற்காக பள்ளி மாணவ மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி மேலூர் அரசு மருத்துவமனையில் இருந்து பஸ் நிலையம் வரை பேரணி நடைபெற்றது. இப்பேரணியை மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

உடன் மேலூர் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி, நகர்மன்ற துணைத் தலைவர் இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் முத்துக்குமார், நகராட்சி சுகாதார ஆய்வாளர் தினேஷ்குமார், பொது பணி மேற்பார்வையாளர் உலகநாதன், பள்ளி தலைமையாசிரியர் நாகராஜன், கவுன்சிலர் சர்மிளா பேகம் ஜாகிர் உசேன், சுகாதார மேற்பார்வையாளர்கள் பாலசுப்பிரமணியன், மயில்வாகனன், சத்யா மற்றும் தூய்மை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விழிப்புணர்வு பேரணி

**அலங்காநல்லூர், ஜன. 14-**

மதுரை மாவட்டம் பாலமேடு காவல்துறை மற்றும் நாடார் மகாஜன சங்கம், வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியின் சார்பில் தேசிய இளைஞர் தினத்தையொட்டி போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பாலமேடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் மலைச்சாமி மற்றும் போக்குவரத்து உதவி காவல் ஆய்வாளர் செல்வம் ஆகியோர் பேரணியை தொடங்கி வைத்தனர். பாலமேடு காவல் நிலையத்திலிருந்து பேரணியாக புறப்பட்டு பஸ் நிலையம் மற்றும் கடைவீதியில் சென்று போதை அழிவுக்கான பாதை, போதை இல்லா தமிழகம் உள்ளிட்ட விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி கல்லூரி மாணவ மாணவிகள் கோஷமிட்டு விழிப்புணர்வு செய்தனர். இதில் கல்லூரியின் பேராசிரியர்கள் ஆனந்த், பழனிக்குமார், மணிகண்டன், குமரேசன், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் தீபா, மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## காவல்துறை அறிவிப்பு

சிவகங்கை மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு
காவல்துறை அறிவிப்பு:

சிவகங்கை மாவட்ட வணிகவியல் குற்ற புலனாய்வு பிரிவு குற்ற எண்.9/2004 பிரிவு 408,409,419,420,465,468,471,477(A), r/w 34 IPC-ன் கீழ் கொடுக்கப்பட் வழக்கானது கனம் சிவகங்கை JM.No.II நீதிமன்ற விசாரனையின் கீழ் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி கதிரவன் S/o முத்தையா, குண்டேந்தல்பட்டி, திருப்பத்தூர் தாலுகா, சிவகங்கை மாவட்டம் ஆகிய உமக்கு மேற்படி வழக்கு சம்பந்தமாக கனம் சிவகங்கை JM.No.II நீதிமன்றத்தில் கடந்த 22.11.2009ல் முதல் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நாளது தேதி வரை பிடியாணையானது நிலுவையில் இருந்து வருகிறது. எனவே மேற்படி வழக்கின் எதிரியை 19.01.2006ம் தேதி காலை 10.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ மேற்டி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியதென்றும், தவறும்பட்சத்தில் மேற்படி எதிரி கதிரவனை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்படுவார் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் ஆய்வாளர்,
பொருளாரா குற்றப்பிரிவு,
சிவகங்கை.

தமிழ்நாடு அரசு,
கரூர் மாவட்டம் - பழையஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சி
தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் 2025-2026
ந.க.எண்.498/ 2025/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் : 09.01.2026

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் 2025-2026 | 139.00 |

தமிழ்நாடு அரசு,
கரூர் மாவட்டம் - கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி
தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு திட்டம் 2025-2026
ந.க.எண்.15/2026 நாள் : 10.01.2026

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு திட்டம் 2025-2026 | 134.00 |

தமிழ்நாடு அரசு.
**பேரையூர் பேரூராட்சி. மதுரை மாவட்டம்.**
ந.க.எண்.382/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 09.01.2026

மதுரை மாவட்டம், பேரையூர் பேரூராட்சியில் 2025-2026ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளிகள் ஆன்லைன் வாயிலாக மட்டும் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நாள்:

| | |
|---|---|
| அ) முன் வைப்புத்தொகை கூட்டம் | 20.01.2026 காலை 11.00 மணி |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைனில் சமர்ப்பித்தல் | 28.01.2026 மாலை 3.00 மணி வரை |
| இ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைனில் திறத்தல் | 28.01.2026 மாலை 3.30 மணி |

செ.ம.தொ.இ / 172 / ஒப்பந்தப்புள்ளி / 2026

தலைவர்
பேரையூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

செயல் அலுவலர்
பேரையூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 104/2025-2026(க&ப)/ம-1/சென்னை/ நாள்: 12.01.2026
ஒப்பந்தம்- C-FORM/ Item Rate

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 47 கட்டட (க & ப) வட்டம் – 2, 2025–26, நாள்: 13. 01.2026

| வ. எண். | | மதிப்பீட்டுத் தொகை | | காலம் |
|---|---|---|---|---|
| 1. | | ரூ.739.34 இலட்சங்கள் | ரூ. 3,80,000/- | 8 மாதங்கள் |

28.01.2026 மாலை 03.00 மணி வரை
28.01.2026 மாலை 04.00 மணி

செ.ம.தொ.இ/247/ஒப்பந்தப்புள்ளி/2026

## அதிக முறை ஆட்டநாயகன் விருது:

# சச்சின் சாதனையை முறியடிக்க விராட் கோலிக்கு வாய்ப்பு



**மும்பை, ஜன. 14-**

அதிக முறை ஆட்டநாயகன் விருது பெற்றவர்களில் முதல் இடத்தில் இருக்கும் சச்சினின் சாதனையை விரைவில்

விராட் கோலி முறியடிக்க வாய்ப்புள்ளது. இன்னும் 5 முறை ஆட்ட நாயகன் விருதை வென்றால் அவர் இந்த மெகா சாதனையை படைக்கலாலம்.

**49 ஓவரில் வெற்றி...**

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல்போட்டி வதோதராவில் நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து 300 ரன்கள் குவித்து, இந்தியாவிற்கு 301 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. அதனைத்தொடர்ந்து விளையாடிய இந்திய அணி 49 ஓவரில் வெற்றி பெற்று அசத்தியது. இந்த போட்டியில் 93 ரன்கள் எடுத்த விராட் கோலி ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

**2-வது வீரராக சாதனை...**

இதன்மூலம் அதிக முறை ஆட்டநாயகன் விருது வென்ற 2-வது வீரர் என்ற சாதனையை விராட் கோலி படைத்துள்ளார். விராட் 71 முறை ஆட்டநாயகன் விருதை வென்றுள்ளார். முதல் இடத்தில் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் உள்ளார். அவர் 75 முறை ஆட்டநாயகன் விருதை வென்றுள்ளார். 3 முதல் 5 இடங்கள் முறையே இலங்கை வீரர் ஜெயசூர்யா (58), தென் ஆப்பிரிக்கா வீரர் கல்லீஸ் (57) இலங்கை வீரர் சங்ககாரா (50) ஆகியோர் உள்ளனர். சர்வதேச கிரிக்கெட்டில் அதிக ரன்கள் குவித்தவர்கள் பட்டியலில் சச்சினுக்கு அடுத்தப்படியாக விராட் கோலி 2-வது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோவில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்கள், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உயர்த்தப்பட்ட பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000/, தொழிலாளர் சேமநலநிதி மூலம் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் முதல் முறையாக பொங்கல் கருணைக் கொடை ரூ.2,000/- வழங்கிடும் அடையாளமாக 12 நபர்களுக்கு பொங்கல் கருணைக் கொடைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வங்கதேச போட்டியை வேறு இடங்களில் நடத்த திட்டமா?

## இந்திய கிரிக்கெட் வாரியம் விளக்கம்

**புதுடெல்லி, ஜன. 14-**

வங்கதேச போட்டியை சென்னை, திருவனந்தபுரத்தில் நடத்த ஐ.சி.சி. திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவலுக்கு இந்திய கிரிக்கெட் வாரியம் விளக்கமளித்துள்ளது.

**ரகுமான் நீக்கம்...**

வங்கதேசத்தில் இந்துக்கள் மீதான தாக்குதல் சம்பவம் எதிரொலியாக ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா அணியில் இருந்து வங்கதேச வீரர் முஸ்தாபிசுர் ரகுமான் நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணமாக டி20 உலக கோப்பையில் இந்தியாவில் விளையாட மாட்டோம் என்றும், தங்களது போட்டிகளை இலங்கைக்கு மாற்ற வேண்டும் என்றும் வங்கதேச கிரிக்கெட் வாரியம் வலியுறுத்தியது.

**மாற்று இடமாக...**

இதை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நிராகரித்ததாக தகவல் வெளியானது. ஆனால் இது குறித்து ஐ.சி.சி. இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை. இதற்கிடையே வங்கதேச அணி இந்தியாவில் விளையாடுவதற்கு ஏற்றவாறு சென்னை, திருவனந்தபுரம் மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. அந்த அணி கொல்கத்தாவில் 3 போட்டியிலும், மும்பையில் ஒரு ஆட்டத்திலும் விளையாட திட்டமிடப்பட்டு இருந்தது.

**தகவல் இல்லை....**

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) செயலாளர் சைகியா கூறியதாவது:- வங்கதேசப் போட்டிகளை சென்னைக்கோ அல்லது வேறு இடத்துக்கோ மாற்றுவது குறித்த எந்த தகவலும் பி.சி.சி.ஐ.க்கு வரவில்லை. இது எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. இது ஐ.சி.சி. மற்றும் வங்கதேச கிரிக்கெட் வாரியத்திற்கு இடையேயான தகவல் பரிமாற்ற விஷயமாகும். ஏனெனில் ஐ.சி.சி.தான் ஆளும் அமைப்பு. இடமாற்றம் குறித்த முடிவை ஐ.சி.சி. எங்களுக்குத் தெரிவித்தால், பி.சி.சி.ஐ., தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். தற்போது எங்களுக்கு அத்தகைய தகவல் எதுவும் இல்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ஊர்க்காவல் படைக்கு தேர்வான

# திருநங்கைகளுக்கு நியமன ஆணைகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, ஜன. 14-**

தமிழ்நாடு ஊர்க்காவல் படைக்கு தேர்வான திருநங்கைகளுக்கு நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இது தொடர்பாக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு;

"2025-2026-ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால், திருநங்கையருக்கு உரிய விழிப்புணர்வையும், வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பையும் வழங்குவதன் மூலம் அவர்களுடைய கண்ணியமான வாழ்வினை உறுதி செய்திட முடியும் என்று அரசு உறுதியாக நம்புகிறது. இந்த உயர் நோக்கத்தினை முன்னிறுத்தி, ஓர் முன்னோடி முயற்சியாக திருநங்கையர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 50 திருநங்கைகளைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, காவல்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநரின் பரிந்துரையில், ஊர்க்காவல்படை - காவல்துறை தலைவர் அவர்களால் 50 திருநங்கைகளை தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்க பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக சென்னை பெருநகர காவல் ஆணையரகம், ஆவடி மற்றும் தாம்பரம் ஆகிய காவல் ஆணையரகங்களிலிருந்து 7 திருநங்கையர்களுக்கு ஊர்க்காவல்படை உறுப்பினர் நியமன ஆணைகளை முதல்வர் நேற்று வழங்கினார்.

முதற்கட்டமாக தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் சென்னையில் 5 நபர்கள், தாம்பரத்தில் 15 நபர்கள், ஆவடியில் 10 நபர்கள், மதுரையில் 7 நபர்கள், கோயம்புத்தூரில் 7 நபர்கள் மற்றும் திருச்சிராப்பள்ளியில் 6 நபர்கள், என மொத்தம் 50 திருநங்கைகள் காவல் துறையுடன் இணைந்து போக்குவரத்து மேலாண்மை, திருவிழாக் காலங்களில் கூட்டநெரிசலைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கூட்டுறவு இணையத்தின் சார்பில்

# 80.62 கோடி ரூபாய் செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, ஜன. 14-**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் ரூ.80.62 கோடி செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 80 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை, நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 5 நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடங்கள் ஆகிய 8 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,096 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் தற்போது 3.56 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 37.44 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 31 லட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் பால் கொள்முதல் செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

ஆவின் நிறுவனத்தின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்:- பால் உற்பத்தியாளர்களுக்கு தரமான கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்து பால் உற்பத்தியை அதிகரிக்கவும், தற்போது அதிகரித்து வரும் கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடியில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவன உற்பத்தி ஆலை.

கோடை மற்றும் வறட்சி காலங்களில் கால்நடைகளுக்கு வருடம் முழுவதும் தரமான பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் சிறப்பு பகுதி வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் 6.72 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 25 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை.

ஆவின் விற்பனை அதிகரிக்கவும், நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 21.57 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் 10,000 லிட்டர் நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

பாலின் தரத்தினை உறுதி செய்யும் வகையில் திருவண்ணாமலை, கடலூர், கரூர், தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 2.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நுண்ணுயிரியல் ஆய்வு கூடங்கள் என மொத்தம் 80.62 கோடி ரூபாய் செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகளிர் பிரீமியர் 5-வது லீக்: பெங்களூரு அணி வெற்றி

**மும்பை, ஜன. 14-**

மகளிர் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் போட்டியின் 5வது லீக் ஆட்டத்தில் உ.பி. வாரியர்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இதில் பெங்களூரு அணி வெற்றிப்பெற்றது.

**பந்து வீச்சு தேர்வு....**

மகளிர் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் போட்டியின் 5வது லீக் ஆட்டத்தில் உ.பி. வாரியர்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. நவி மும்பையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற பெங்களூரு முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. உ.பி. வாரியர்ஸ் அணியின் தொடக்க வீராங்கனைகளாக கேப்டன் மேக் லென்னிங், ஹெர்லின் டியோல் களமிறங்கினர். லென்னிங் 14 ரன்னிலும், டியோல் 11 ரன்னிலும் அவுட் ஆகினர். அடுத்து வந்த லிட்ச்பில்ட் 20 ரன்கள், கிரன் 5 ரன்கள் எடுத்தனர். ஷிராவத் டக் அவுட் ஆனார்.

**உ.பி. வாரியர்ஸ் தோல்வி....**

பின்னர் களமிறங்கிய டெண்ட்ரா, தீப்தி சர்மாவுடன் ஜோடி நிதானமாக ரன்கள் சேர்த்தது. 20 ஓவர்கள் முடிவில் உ.பி. வாரியர்ஸ் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 143 ரன்கள் எடுத்தது. 144 ரன்கள் வெற்றி இலக்குடன் பெங்களூரு அணியின் தொடக்க வீராங்கனைகளாக ஸ்மிருதி மந்தனா மற்றும் கிரேஸ் ஹாரிஸ் களமிறங்கினர். கிரேஸ் ஹாரிஸ் 22 பந்துகளில் அரைசதமும் 40 பந்துகளில் 85 ரன்களும் அடித்து ஷிகா பாண்டேவிடம் பந்தில் அவுட் ஆனார். மந்தனா ஆட்டமிழக்காமல் 47 ரன்கள் குவித்தார். இறுதியில் 12.1 ஓவர்களில் 9 விக்கெட் வித்தியாசத்தில் உ.பி. வாரியர்ஸ் அணியை பெங்களூரு அணி வீழ்த்தியது.

# சபரிமலையில் இன்று மகரஜோதி தரிசனம்

## குவியும் பக்தர்களால் பலத்த பாதுகாப்பு

**திருவனந்தபுரம், ஜன. 14-**

சபரிமலையில் இன்று மகரஜோதி தரிசனத்தை முன்னிட்டு அங்கு குவியும் பக்தர்களால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சபரிமலை அய்யப்பன் கோவிலில் மகரவிளக்கு சீசனின் முத்தாய்ப்பு நிகழ்ச்சியாக இன்று (புதன்கிழமை) மகர ஜோதி தரிசனம் நடக்கிறது. அன்றைய தினம் சாமி அய்யப்பனுக்கு பாரம்பரிய வழக்கப்படி, திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனை காட்டப்படும். அவ்வாறு அணிவிக்கப்படும் திருவாபரணங்கள், பந்தளம் அரண்மனையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த திருவாபரணங்கள் பந்தளம் ராஜ குடும்ப மூத்த பிரதிநிதி தலைமையில் ஊர்வலமாக சன்னிதானத்திற்கு எடுத்து செல்வது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் திருவாபரண ஊர்வலம் நேற்று பந்தளம் வலிய கோயிக்கல் சாஸ்தா கோவிலில் இருந்து பந்தளம் ராஜ குடும்ப பிரதிநிதி புணர்தம் நாள் பி.என். நாராயணவர்மா தலைமையில் ஊர்வலமாக புறப்பட்டது.

இதனையொட்டி கோவிலில் திருவாபரணங்கள் 3 சந்தன பேழைகளில் வைத்து பூஜிக்கப்பட்டது. பந்தளம் முதல் சன்னிதானம் வரையிலான திருவாபரண ஊர்வலத்திற்கு துணை போலீஸ் சூப்பிரண்டு ஜி.சந்தோஷ் தலைமையிலான திரளான போலீசார் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வார்கள். அவர்களுடன் மருத்துவக் குழு, தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் செல்கிறார்கள். இன்று (புதன்கிழமை) மதியம் திருவாபரண ஊர்வலம் பம்பை கணபதி கோவில் வந்து சேரும். அங்கு சிறிது நேர ஓய்வுக்கு பிறகு திருவாபரண பெட்டிகள் மேள, தாளம் முழங்க தலைச்சுமையாக சன்னிதானத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

மகரவிளக்கு பூஜையும், மகரஜோதி தரிசனத்தையும் ஒட்டி பக்தர்கள் கட்டுக்கடங்காமல் குவிந்து வருகின்றனர். பல நாட்களுக்கு முன்பே ஏராளமான பக்தர்கள் மகரஜோதியை தரிசிப்பதற்காக பல்வேறு பகுதிகளில் குடில் கட்டி தங்கியுள்ளனர். மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு சபரிமலையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## சென்னையில் தே.ஜ. கூட்டணி சார்பில் பொதுக்கூட்டம்:

# பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் வருகிற 23-ம் தேதி நடைபெறுகிறது

**சென்னை, ஜன. 14-**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கும் பொதுக் கூட்டம் வருகிற 23-ம் தேதி சென்னையில் நடைபெறும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, பிரதமர் மோடி கலந்து கொள்ளும் கூட்டம் மதுரையில் உள்ள பாண்டிகோயில் அம்மா திடலில் நடத்த திட்டமிடப்பட்டது. இதையொட்டி, மதுரை பாண்டிகோயில் அருகே யுள்ள அம்மா திடலில் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் திங்கள் கிழமை ஆய்வு செய்தார்.

இந்த நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்கும் ஊர்வலம், பொதுக் கூட்டம் சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் யாரெல்லாம் இடம்பெறுவர் என்பதை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், அ.தி.மு.க. பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமியும்தான் முடிவு செய்வார்கள் என்று கூறப்படுகிறது.



தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அன்புமணி தரப்பு பா.ம.க .இணைந்துள்ளது. தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தொடர்வதாக அந்தக் கட்சியின் தலைவர் ஜான் பாண்டியன் தெரிவித்துள்ளார். அ.தி.மு.க. கூட்டணிக்கு ஓரிரு நாள்களில் புதிய கட்சி ஒன்று வரவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இந்த நிலையில், பிரதமர் மோடியின் வருகைக்கு முன்பே கூட்டணி இறுதி செய்யப்பட்டு, தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# தவானுக்கு விரைவில் 2-வது திருமணம்

**மும்பை, ஜன. 14-**

இந்திய கிரிக்கெட் அணியிலிருந்து ஓய்வு பெற்ற முன்னாள் வீரர் ஷிகர் தவானுக்கு மீண்டும் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. விரைவில் அவர் தமது காதலியுடன் 2-வது திருமணம் செய்ய உள்ளார்.

**விவாகரத்து...**

முன்னதாக, தமது முதல் மனைவி ஆயிஷா முகர்ஜியுடனான ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் கடந்த 2023-ஆம் ஆண்டு அக்டோபரில் இருவரும் விவாகரத்து பெற்றனர். முன்னதாக, தவானை மணமுடிக்கும் முன்பே, முதல் திருமணம் செய்து கொண்டிருந்த ஆயிஷாவுக்கு 2 மகள்கள் உள்ளனர். இந்த நிலையில், கடந்த 2011-இல் தவானை மணமுடித்த அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. விவாகரத்துக்குப்பின், அவர்களுடைய ஒரே மகன் ஸோராவர் ஆயிஷாவுடனே வாழ்வதால் தவான் மகனைப் பிரிந்து வாடுவதை தாங்க முடியாமல், தான் விவாகரத்துக்குப்பின் அடைந்த மன வேதனையை கடந்தாண்டு பிப்ரவரியில் பொதுவெளியில் வெளிப்படுத்தி ஆதங்கத்தைக் கொட்டினார்.



**அரபு அமீரகத்தில்...**

இந்த நிலையில், துபையில் கடந்தாண்டு தொடக்கத்தில் நடைபெற்ற சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரின்போது தமது தோழி சோபி ஷைனுடன் ஷிகர் தவான் வலம் வந்ததைக் காண முடிந்தது. அப்போதிருந்தே இருவருக்குமான உறவு குறித்த பரபரப்பு தொற்றிக்கொண்டது. அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட நிறுவனமொன்றின் துணைத் தலைவராக இருக்கும் சோபி ஷைன், ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிப்பவர். இந்த நிலையில், அவருக்கும் தவானுக்கும் இடையே ஐக்கிய அரபு அமீரகத்தில் வைத்து பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் காதலாக மலர்ந்தது இந்த உறவு.

**பிப்ரவரியில் திருமணம்...**

கடந்த காலங்களில் ஐபிஎல் தொடர்களில் ஷிகர் தவான் பஞ்சாப் கிங்ஸ் அணியில் சேர்ந்து விளையாடிய போது சோபி பஞ்சாப் அணிக்கு ஆதரவு தெரிவித்து ஷிகர் மீதான அன்பை வெளிப்படுத்த தவறவில்லை. இருவரும் வரும் பிப்ரவரியில் திருமணம் செய்யப்போவதாக அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# வீனஸ் வில்லியம்ஸ் ஏமாற்றம்

ஆஸ்திரேலியா கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் வருகிற ஞாயிற்றுக்கிழமை தொடங்க இருக்கும் நிலையில், முதல் சுற்று போட்டி நேற்று தொடங்கியது. ஆஸ்திரேலியா கிராண்ட்ஸ்லாம் போட்டியில் விளையாட வைல்டு கார்டு அனுமதி பெற்ற 45 வயதான வீனஸ் வில்லியம்ஸ், ஹோபார்ட் ஓபனில் விளையாடவும் வைல்டு கார்டு அனுமதி பெற்றார்.இன்று வீனஸ் வில்லியம்ஸ் முதல் சுற்றில் ஜெர்மனியைச் சேர்ந்த தட்ஜனா மரியாவை எதிர்கொண்டார். சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் 4-6, 3-6 என நேர்செட்டில் கணக்கில் தோல்வியை சந்தித்தார்.

கடந்த வாரம் நியூசிலாந்தில் நடைபெற்ற ஆக்லாந்து போட்டியிடும் வீனஸ் வில்லியம்ஸ் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்தார். ஆஸ்திரேலியா ஓபனில் இரண்டு முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார். இரண்டு முறையும் தனது சகோதரி செரீனா வில்லியம்ஸிடம் தோல்வியடைந்துள்ளார். மெல்போர்ன் பார்க்கில் நடைபெறும் ஆஸ்திரேலிய ஓபனில் 5 வருடங்கள் கழித்து விளையாட இருக்கிறார்.

## பொங்கலை முன்னிட்டு தொடர் விடுமுறை:

# வங்கிகள் 4 நாட்கள் செயல்படாது

**சென்னை, ஜன. 14-**

பொங்கலையொட்டி தொடர் விடுமுறை காரணமாக நாளை முதல் வங்கிகள் 4 நாட்கள் செயல்படாது. இதனால் பணம் மற்றும் காசோலை பரிவர்த்தனை கடுமையாக பாதிக்கும் நிலை ஏற்படும்.

பொங்கல் பண்டிகை நாளை (வியாழக்கிழமை) கொண்டாடப்படுகிறது. மறுநாள் 16-ந்தேதி மாட்டுப் பொங்கல், 17-ந்தேதி காணும் பொங்கல் கொண்டாடப்பட உள்ளது. பொங்கலையொட்டி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு 5 நாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளது.

வங்கிகள் 4 நாட்கள் செயல்படாது என்று அறிவித்துள்ளது. 15-ந்தேதி பொங்கல் முதல் 18-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து விடுமுறை நாட்கள் வருவதால் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் தனியார் வங்கிகளும் செயல்படாது. வங்கிகள் 4 நாட்கள் மூடப்படுவதால் சேவைகள் கடுமையாக பாதிக்கக்கூடும். பணம் மற்றும் காசோலை பரிவர்த்தனை பல ஆயிரம் கோடி நடைபெறாமல் முடங்கும். நாளை (புதன்கிழமை) மட்டுமே வங்கி செயல்படும் என்பதால் வர்த்தக பிரமுகர்கள், தொழில் நிறுவனங்கள் தங்களுடைய வங்கி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாராகி வருகின்றனர்.

அனைத்து வங்கிகளும் தொடர்ந்து மூடப்படுவதால் பொதுமக்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்படும். அவற்றை சமாளிக்க ஏ.டி.எம்.கள் மூலம் உதவி செய்ய வேண்டும். பணத்தை நிரப்பக்கூடிய தனியார் நிறுவனங்கள் இந்த பணியை முறையாக செய்ய வங்கி மேலாளர்கள் நாளை முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

## வத்தலக்குண்டு அருகே

# அய்யம்பாளையம் மருதாநதி அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார் அமைச்சர்



**வத்தலகுண்டு, ஜன. 14-**

வத்தலகுண்டு அருகே அய்யம்பாளையம் மருதாநிதி அணையில் இருந்து அமைச்சர் பெரியசாமி தண்ணீர் திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி அருகேயுள்ள அய்யம்பாளையம் மருதாநதி அணையிலிருந்து தண்ணீரை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்துவிட்டார். அய்யம்பாளையம் மருதாநதி அணையின் நீர்மட்டம் 72 அடி உயரமாகும். தாண்டிக்குடி, பண்ணைகாடு, பாச்சலூர், கடுகுதடி உள்ளிட்ட மலைப்பகுதிகள் மற்றும் மேற்கு தொடர்ச்சிமலைப்பகுதிகளில் பெய்யும் மழைநீர் அணைக்கு நீர் ஆதாரமாகும்.

இம்மலைப்பகுதிகளில் உள்ள நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழை காரணமாக அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து முழு கொள்ளவான 72 அடியை எட்டியுள்ளது. இந்நிலையில் அணையிலிருந்து குடிதண்ணீர் மற்றும் விவசாயத்திற்காக அணையிலிருந்து தண்ணீரை ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்துவிட்டார். அணையிலிருந்து நேற்று முதல் 100 கன அடிதண்ணீர்திறந்தவிடப்பட்டுள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவைப் பொறுத்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. அணையை திறந்து வைத்த பின்பு அமைச்சர் இ.பெரியசாமி அளித்த பேட்டியில், மருதாநதி அணையிலிருந்து குடிநீருக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மழை பெய்து தண்ணீர் அளவு அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக விவசாயத்திற்கும் தண்ணீர் திறந்துவிடப்படும். மருதாநதி அணை மற்றும் ஆத்தூர் காமராஜர் அணையை சுற்றுலாத் தலமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 100 நாள் வேலை திட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு வேலை நாட்களை அதிகரித்து வழங்கியுள்ளார். அதிகநாட்கள் வேலைவழங்கியுள்ளார். ஒன்றிய பா.ஜ.அரசு நாட்டின் விடுதலைக்காக போராடிய காந்தியடிகளின் பெயரை மாற்றியுள்ளதுகண்டனத்திற்குரியது. தேர்தலுக்காவும் மக்களை ஏமாற்றுவதற்காகவும் 100 நாட்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தை முடக்குவதற்காகவும் 125 நாட்கள் என அறிவித்துள்ளனர் இது ஏமாற்று வேலை. ஆண்டு முழுவதும் விவசாய வேலை இல்லாத சூழவில் ஏழை மக்களுக்கு பெரிதும் பயனுள்ள இந்த திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியைஒன்றியஅரசுவழங்கவில்லை என்றார்.

இந்நிகழ்ச்சியில் மருதாநதி அணை செயற்பொறியாளர் சரவணன், உதவி செயற்பொறியாளர் தமிழ்செல்வன் அணை உதவி பொறியாளர் கோகுலகண்ணன், ஆத்தூர் தாசில்தார் முத்துமுருகன் தி.மு.க. மாநில செயற்குழு உறுப்பினர் நடராஜன், அய்யம்பாளையம் பேரூராட்சி தலைவர் ரேகா அய்யப்பன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், ஆத்தூர் ஒன்றிய செயலாளர்கள் ராமன், முருகேசன், அய்யம்பாளையம் தி.மு.க. நகர செயலாளர் தங்கராஜ் தேவகம்பட்டி நகர செயலாளர் தங்கராஜன். சேவுகம்பட்டி பேரூராட்சித்தலைவர் வனிதாதங்கராஜன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயிகள் மற்றும்பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கோரிக்கைகளை வலியுறுத்தி அமைச்சரிடம் ஊரக வாழ்வாதார பணியாளர்கள் மனு



**கடலாடி, ஜன. 14-**

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகாவைச்சேர்ந்த சிக்கல் ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பணியாளர்களின் 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பனிடம் கோரிக்கை மனு அளித்தனர். மனுவில் அடிப்படை ஊதியம் - மற்றும் ஊதியம் மாவட்ட அலுவலகம் மூலம் பணியாளர்களுக்கு நேரடியாக வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டும். வருங்கால வைப்பு நிதி -காப்பீடு -உயிரழந்த பணியாளர்கள் குடும்பத்திற்கு இழப்பீடு- பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட 14 கோரிக்கையை வலியுறுத்தி மனு அளித்தனர். மனு அளிக்கையில் செயற்குழு உறுப்பினர் செந்தில் மற்றும் அனைத்து பணியாளர்கள் உடன் இருந்தனர்.

## கொரோனா காலங்களில் கூட

# தமிழ்நாட்டில் இ.பி.எஸ். ஆட்சியில் பொருளாதாரம் சிறப்பாக இருந்தது

### மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் புகழாரம்

**மதுரை, ஜன 14-**

தமிழகத்தில் கொரோனா காலங்களில் எடப்பாடியாரின் ஆட்சியின் போது பொருளாதாரம் சிறப்பாக இருந்ததாக அ.தி.மு.க. மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் புகழாரம் சூட்டியுள்ளார்.



இது குறித்து அ.தி.மு.க. மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

தமிழக அரசு பல்வேறு விருதுகளை அறிவித்து வருகிறது. இதில் அண்ணா, அம்பேத்கர், காமராஜர், மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், திரு.வி.க. ஆகியோரின் பெயர்களில் விருதுகளை அறிவித்து அந்த விருதுகளுக்கு பல்வேறு நபர்களை பரிந்துரை செய்து அறிவித்துள்ளது. குறிப்பாக மணல் ஊழலில் உள்ளிட்ட பல்வேறு ஊழலில் சர்ச்சையாகியுள்ள அமைச்சர் துரை முருகனுக்கு அண்ணா விருதை அறிவித்துள்ளார்கள். இன்றைக்கு மக்கள் மத்தியில் மிகப்பெரிய விவாதம் நடைபெற்று வருகிறது. தமிழக அரசியல் வரலாற்றில் ஏன் இந்தியாவிலே எந்த மாநிலம் செய்யாத வகையில் ஆட்சிக்கு வந்த 51 மாத ஆட்சியில் 4 லட்சம் கோடி வரை ஊழல் செய்துள்ளது. இந்த ஊழல் பட்டியலை எடப்பாடியார் ஆளுநரை நேரடியாக சென்று இதற்கு ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் விசாரிக்க குழு அமைக்க வேண்டும் என்று கூறினார். இதுகுறித்து புள்ளி விவர அறிக்கையுடன் ஊடகங்களுக்கு நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தார்.இது வரை தமிழக அரசின் சார்பில் இதுகுறித்து எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை முதலமைச்சர் இதுகுறித்து வாய் திறக்க மறுக்கிறார்.இதையெல்லாம் மக்கள் பார்த்து பல்வேறு விருதுகளை அரசு அறிவிக்கிறது. குறிப்பாக தமிழகத்தின் கடன் சுமை இன்றைக்கு 9.30 லட்சம் கோடி அளவில் உயர்ந்த விட்டது. ஆனால் கடன் கட்டுக்குள் உள்ளதாக கூறுகிறார்கள்.கடந்த 2021 தி.மு.க.தேர்தல் அறிக்கையில் தமிழகத்தின் கடன் சுமையை குறைக்க குழு அமைப்போம் என்று கூறினார்கள் அதனை தொடர்ந்து குழு அமைத்தார்கள் அந்த குழு அறிக்கை என்ன ஆனது ?அந்த குழுவின் அறிக்கையை பின்பற்றினார்களா?. ஆனால் பொருளாதார நிபுணர்கள் தமிழகத்தின் கடன் சுமை மிகவும் ஆபத்தாக உள்ளது. குறிப்பாக தமிழகத்தில் விலைவாசி உயர்வு மற்ற மாநிலங்களை காட்டிலும் அதிகமாக உள்ளது. மின்கட்டண உயர்வால் தொழில் நிறுவனங்கள் எல்லாம் தமிழகத்திற்கு வர மறுக்கிறது. சரியான பொருளாதார வல்லுநர்களை முறையாக தமிழக அரசு அணுகவில்லை. கடந்த அம்மாவின் ஆட்சிக்காலத்தில் ஆண்டுக்கு 68,500 கோடி அளவில் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. தற்போது தி.மு.க. அரசு இதில் பாதியளவு கூட சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு ஒதுக்கப்படவில்லை.கடந்த நான்கரை ஆண்டுகளில் தி.மு.க. வாங்கிய கடனுக்கு தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினர் தலையில் 4 லட்சம் ரூபாய் அளவில் கடன் சுமை உள்ளது இந்த கடன் சுமையை மக்கள் ஏற்க முடியாது அரசுதான் இதற்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

எடப்பாடியார் ஆட்சியில் கொரோனா காலங்களில் கூட தமிழகத்தின் பொருளாதார சிறப்பாக இருந்தது.தமிழகத்தின் கடன் சுமையை குறைக்க ஒரே வழி தி.மு.க. அரசு ஊழல் செய்த 4 லட்சம் கோடியை மீட்டு அரசு கஜானாவை சேர்த்தாலே தமிழகத்தின் கடன்சுமை பாதி அளவில் குறைந்து விடும். இவ்வாறு அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## முதுகுளத்தூர் அருகே

# நம்மாழ்வார் வேளாண்மை கல்லூரி மாணவர்களின் நடவு பயிற்சி



**முதுகுளத்தூர், ஜன. 14-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே பேரையூர் கிராமத்தில் உள்ள நம்மாழ்வார் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் கீழ் விவசாயிகளை சந்தித்து நடவு முறைகளை கற்றுக் கொண்டு வருகின்றனர்.

முதுகுளத்தூர் தாலுகா கீழக்கன்னிச்சேரி. விவசாயி நாகநாதன் வயலில் 82 வகையான பாரம்பரிய நெல் வகைகளை பயிரிட்டுள்ளார். அம்ருதா பள்ளி மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் களப் பரிசோதனையை அவரது வயலில் மேற்கொண்டனர். நெல் வகைகள் வறட்சியை தாங்கி வளரக்கூடியவை. அதனை இக்கல்லூரி மாணவிகள் கண்டு விவசாயிடம் வேளாண் சார்ந்த அனுபவங்களை கற்றுக் கொண்டனர்.

## நிலக்கோட்டையில்

# விவேகானந்தரின் பிறந்த நாள் விழா



**வத்தலகுண்டு, ஜன. 14-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் வள்ளலார் சிந்தனை பாசறையும், நிலக்கோட்டை ஸ்டுடன்ட்ஸ் டுடோரியல் கல்லூரி மாணவர்களும் இணைந்து சுவாமி விவேகானந்தரின் 163 வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். இந்நிகழ்ச்சியில் ஸ்டுடென்ட்ஸ் டுடோரியல் கல்லூரி முதல்வர் இளங்கோ, பிரமலைக்கள்ளர் கூட்டமைப்பு ஆன்மீகப் பிரிவு மாநில செயலாளர் ஆனந்தன், மற்றும் மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கடலாடி அருகே

# விதை நெல்லுக்குக்கூட வழி இல்லை: 5 ஆயிரம் ஏக்கர் நெல் விவசாயம் பாதிப்பு



**கடலாடி, ஜன. 14-**

கடலாடி வட்டாரத்தில் போதிய மழை இல்லாததால், விதை நெல்லுக்குக்கூட வழி இல்லாத வேதனையில் விவசாயிகள் உள்ளனர்.

கடலாடி வட்டாரத்தில் விதைப்பு நேரத்தில் மழை பெய்யவில்லை. பருவத்தில் விதைத்தால் தான் களை வராது .நோய் விழாது என எண்ணி பல இடங்களில் புழுதிக்காட்டில் , புரட்டாசி மாதம் கடைசி வாரத்தில் நெல் விதைப்புப் பணி தொடங்கினர். அது முதல் இன்று வரை இப்பகுதியில் கன மழை இல்லை. அவ்வப்பொழுது மிதமான மழையே பெய்து வந்தது; அதுவும் தொடர்ந்து இல்லை. இப்பகுதியில்உள்ள எந்த கண்மாய்களும் நிரம்பவில்லை. வயல்களிலும் தண்ணீர் நிரம்பவில்லை. இதன்காரணமாக பயிர்களை விட களைகளே மிகுந்து வந்தன. விவசாயிகள் வயல் சென்று பார்த்தால் பயிரைவிட களைகளே மிகுந்திருப்பதைக்கண்டு அதிர்ச்சி அடைந்தனர். களைக்கொல்லி அடித்து விடலாம் என்றால், அதற்கும் தண்ணீர் இல்லை. ஈரப்பதத்துடன் களைக் கொல்லி அடித்தவர்களுக்கு களை அழியவில்லை.

ஒரு ஏக்கருக்கு 2000 ரூபாய் களைக் கொல்லி அடித்தும் பயன்இல்லை. களை எடுத்து, உரமிட்டு ஒரு பயனும் இல்லை. மழை இல்லாததால் கதிராகும் நேரத்தில் கருகி வருகின்றன. சில இடங்களில் பயிரிலேயே கருகி வருகின்றன. இதனால், வாங்கிய கடனை எப்படி திருப்பிச் செலுத்துவது ? என, விவசாயிகள் வழி தெரியாமல் மிகவும் கவலை அடைந்துள்ளனர். மேலும், ஆடு,மாடு வளர்ப்போர் தண்ணீரின்றி அவதிப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஆகையால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கவும், தண்ணீர் பற்றாக்குறையைப்போக்க கரூர் காவிரி பைப்லைன் பணியை விரைவில் முடிந்து செயல்பாட்டிற்கு கொண்டுவரவும். இப்பகுதி மக்கள் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கடலாடி தாலுகாவைசேர்ந்த வாகைக்குளம் , ம.கரிசல்குளம், அ.உசிலங்குளம், டி.வேப்பங்குளம், கடலாடி, கடுகுசந்தை, அவத்தாண்டை, ஒருவானேந்தல், ஆப்பனூர்,கமுதி தாலுகாவில் கோவிலாங்குளம், மு.புதுக்குளம், பெருநாழி, அறியமங்களம் உள்ளிட்ட 60 வருவாய்கிரமங்களில் சுமார் 5000 ஏக்கருக்குமேல் பாதிப்படைந்துள்ளன.மாவட்ட நிர்வாகமும் வேளாண்மை துறையினரும் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளன.



**மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் அறிவுறுத்தலின்படி செல்லம்பட்டி தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகளுக்கு வேட்டி, சேலை இனிப்பு உள்ளிட்ட பொங்கல் பரிசை தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் முத்துராமன் வழங்கினார்.**

# அரசுப்பள்ளி ஆசிரியர் எழுதிய கதம்பத்தேன் நூல்: அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார்



**ராமநாதபுரம், ஜன. 14-**

ராமநாதபுரம் மாவட்டம் ரெகுநாதபுரத்தை சேர்ந்த அரசு பள்ளி ஆசிரியர் எழுதிய கதம்பத்தேன் என்ற நூலை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டு வாழ்த்தினார்.

ராமநாதபுரம் மாவட்டம், ரெகுநாதபுரம், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில், ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்து வருபவர் க.வளர்மதி. இவர் தன்னம்பிக்கை, ஆசிரியர் பணி அனுபவம், வரலாறு, தொல்லியல், கவிதைகள், இயற்கை, சுற்றுச்சூழல், வாழ்வியல் போன்ற தலைப்புகளில் 25 கட்டுரைகளைக் கொண்ட 'கதம்பத்தேன் வரலாறும் வாழ்வியலும்' என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதியுள்ளார். இந்நூலை, விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணரில் வைத்து நிதி, சுற்றுச்சூழல் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட, தமிழ்நாடு தொல்லியல் துறையின் முன்னாள் உதவி இயக்குநரும், பாண்டியநாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின் செயலருமான சொ.சாந்தலிங்கம் பெற்றுக் கொண்டார். பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் புத்தகம் எழுதிய ஆசிரியர் வளர்மதிக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்தார். நிகழ்ச்சியில் ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வே.ராஜகுரு, நூர்சாகிபுரம் சிவகுமார், கல்வெட்டு ஆய்வாளர் உதயகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



**சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார்.உடன்கல்விஅலுவலர்கள்பாலதண்டாயுதபாணி,மாரிமுத்து,தலைமையாசிரியர் ராய்செல்வன் உட்பட பலர் உள்ளனர்.**



**மதுரை மாவட்ட பா.ஜ.க. கட்டிட நிதியாக பா.ஜ.க. மதுரை கிழக்கு மாவட்டம், மருத்துவர் பிரிவு மாவட்ட அமைப்பாளர் மேலூர் டாக்டர் கணேசன், மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரனிடம் ரூ.5 லட்சம் வழங்கினார். அருகில் கிழக்கு மாவட்ட தலைவர் ராஜசிம்மன், முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன், இந்து தர்ம போராளி ஹெச்.ராஜா, மாநில துணைத்தலைவர் ராமலிங்கம், மாநில செயலாளர் கதலி நரசிங்க பெருமாள், ஓ.பி.சி. மாநில செயலாளர் செந்தில்கிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் தங்கவேல்சாமி ஆகியோர் உடன் இருந்தனர்.**

# அருப்புக்கோட்டை கிரீன் ஆப்பிள் மாடர்ன் ஸ்கூல் ஆண்டு விழாவில் சின்னத்திரை நடிகர்கள் பங்கேற்பு



**அருப்புக்கோட்டை, ஜன. 14-**

அருப்புக்கோட்டை ஸ்ரீ சங்கர பாண்டியன் மல்லிகா எஜுகேஷனல் டிரஸ்ட் சார்பாக கிரீன் ஆப்பிள் மாடர்ன் பள்ளி 15 ஆவது ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. ஆண்டு விழாவிற்கு பள்ளியின் தாளாளர் நந்திதா லட்சுமி தலைமை வைத்தார்.

டிரஸ்ட் நிறுவனர் சிவப்பிரகாசம், மேனேஜிங் டிரஸ்டி சேர்மன் சுந்தர லட்சுமி சிறப்பு உரையாற்றினார். பள்ளி முதல்வர் சிந்து ஆண்டு அறிக்கை வாசித்தார். ஆண்டு விழாவில் பள்ளி சிறுவர் சிறுமிகள் விளையாட்டு மற்றும் நடன கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சின்னத்திரை நடிகர் ஈரோடு மகேஷ் பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினர்.

நிகழ்ச்சியில் பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# நத்தம் : மலைப்பாம்பு பிடிபட்டது

**நத்தம், ஜன. 14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே அய்யாபட்டி பகுதியில் குடிதண்ணீர் தொட்டி ஒன்று உள்ளது.

இந்த தண்ணீர் தொட்டி பகுதியில் நேற்று 10 அடி நீளமுள்ள மலைப்பாம்பு ஒன்று ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. இதை பார்த்த கிராமத்தினர் நத்தம் தீயணைப்பு துறையினருக்கு மனோஜ் தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்றனர். பின்னர் அங்கு தொட்டி அருகே ஊர்ந்து கொண்டு இருந்த மலைப்பாம்பை பொது மக்கள் உதவியுடன் பிடித்த தீயணைப்பு துறையினர் அதை வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து மலைப்பாம்பு வனப்பகுதியில் விடப்பட்டது.




● முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முருகானந்தம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னை, கலைஞர் நூற்றாண்டு பூங்காவில், பல்வேறு விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, பொங்கல் திருநாளையொட்டி தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திவரும் தமிழ்நாடு அரசிற்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எழிலன், மற்றும் பல்வேறு விவசாய சங்க தலைவர்கள், நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




● முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 80 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை, நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 5 நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடங்கள் ஆகிய 8 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# தமிழ்நாடு மீனவர்கள் 10 பேரை விடுவிக்க நடவடிக்கை தேவை

## மத்திய அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜன. 14-

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்காக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். மேலும், தற்போதைய நிலவரப்படி, சமீபத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உள்பட, இதுவரை மொத்தம் 83 மீனவர்களும், 252 மீன்பிடிப் படகுகளும் இலங்கைவசம் உள்ளதாகவும் அவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### தடுத்து நிறுத்த...

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் நேற்று (ஜன. 13) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கும் உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி, முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்று (ஜன. 13) கடிதம் எழுதியுள்ளார்.

### துயரச் சம்பவம்...

அக்கடிதத்தில், அறுவடைத் திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி, தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள ஒரு துயரச் சம்பவம் தொடர்பாகவும், தொடர்ந்து அவர்கள் எதிர்கொண்டுவரும் இன்னல்கள் தொடர்பாகவும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதல்வர் தெரிவித்துள்ளார்.

### தொடர்ந்து கைது...

நேற்று அதிகாலையில், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற ராமநாதபுரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டு மீனவர்கள் இது போன்று தொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்படுவதும் மிகுந்த கவலையளிப்பதாக அவர் தனது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

### 83 மீனவர்கள்...

மேலும், தற்போதைய நிலவரப்படி, சமீபத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உள்பட, இதுவரை மொத்தம் 83 மீனவர்களும், 252 மீன்பிடிப் படகுகளும் இலங்கைவசம் உள்ளதாகவும் முதல்வர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் துயரமான மற்றும் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டும், பொங்கல் பண்டிகையினை தங்கள் குடும்பத்தினருடன் கொண்டாடிட ஏதுவாகவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அரசு உடனடியாக விடுவித்திடவும், தொடர்ந்து இதுபோன்ற கைது நடவடிக்கைகளைத் தடுத்திடவும், மத்திய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



● அ.தி.மு.க. பொதுச்செயாலாளர் எடப்பாடி கே.பழனிசாமி நேற்று சென்னை தலைமை அலுவலகத்தில் வரும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வேண்டி விருப்ப மனு அளித்த வட சென்னை கிழக்கு, மேற்கு, புதுச்சேரி மற்றும் கேரள மாநில நிர்வாகிகளுடன் நேர்காணல் நடத்தினார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் கே.பி. முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன் உள்ளிட்டோர் உள்ளனர்.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

# தமிழ்நாடு முழுவதும் இன்று முதல் 5 நாட்கள் பள்ளிகளுக்கு விடுமுறை

சென்னை, ஜன. 14-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் இன்று முதல் 5 நாட்கள் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் வருகிற 19-ம் தேதி (திங்கட்கிழமை) அன்று பள்ளிகள் வழக்கம்போல் இயங்கும் என்றும் பள்ளிக்கல்வித் துறை தெரிவித்துள்ளது.

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையான பொங்கல் பண்டிகை வருகிற 15-ம் தேதியும், மாட்டுப் பொங்கல் 16-ம் தேதியும் கொண்டாடப்பட இருக்கிறது.

இந்த நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று (14-ம் தேதி) போகிப் பண்டிகை முதல் 5 நாட்கள் பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து தமிழக பள்ளி கல்வித்துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளுக்கும் இன்று (14-ம் தேதி) முதல் 18-ம் தேதி வரை 5 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து வருகிற 19-ம் தேதி (திங்கட்கிழமை) அன்று பள்ளிகள் வழக்கம்போல் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் அறிவுறுத்தலின்பேரில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

# ஜன.17-ல் முதல்வர் ஸ்டாலின்.... (1-ம் பக்க தொடர்ச்சி)

கோலப்போட்டிகளில் பங்கேற்கும் மகளிர் வண்ணக் வண்ணக் கோலங்களை வரைந்து, சமத்துவம் பொங்கட்டும், தமிழ்நாடு வெல்லட்டும், திராவிட மாடல் அரசு தொடரட்டும் என்ற வாசகங்களை எழுதுவதும், கடந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், அதிலும் மகளிர் நலன் காக்கும் திட்டங்களையே வண்ணக் கோலங்களாக வரைந்து, பார்வையாளர்களின் கண்களை ஈர்த்து, நெஞ்சில் பதிய வைப்பதும் அருமையான நிகழ்வுகளாகத் தொடர்கின்றன.

### கோலாகலமாக...

உங்களில் ஒருவனான என்னுடைய கொளத்தூர் தொகுதியிலும் சமத்துவப் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. சென்னை தெற்கு மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி பங்கேற்ற பொங்கல் விழா கோலாகலமாக நடைபெற்றுள்ளது.

அமைச்சர்கள், பாராளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்புடன் கழக நிர்வாகிகள் நடத்துகிற ஒவ்வொரு பொங்கல் விழாவும் தமிழ் மணத்துடனும் தமிழர் பண்பாட்டுத் திறத்துடனும் கொண்டாடப்படுகின்றன.

### அலங்காநல்லூருக்கு....

கழகம் நடத்துகின்ற பொங்கல் விழாக்களில் வழங்கப்படும் அன்பான பரிசுகள், அனைத்து நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், அல்லும் பகலும் அயராது பணியாற்றும் உடன்பிறப்புகளின் கைகளுக்கும் சென்று சேர வேண்டும் என்பதை உங்களில் ஒருவனாக உரிமையுடன் தெரிவித்திடக் கடமைப்பட்டு உள்ளேன்.

தமிழ் இனத்தின் பண்பாட்டுப் பெருமைகளில் ஒன்றான, ஜல்லிக்கட்டு எனப்படும் ஏறுதழுவுதல் நிகழ்வைப் பார்ப்பதற்கு உங்களில் ஒருவனான நான், உங்களால் தமிழ்நாட்டு முதல்வரான நான் ஜனவரி 17-ம் நாள் அதாவது, தை மாதம் 3-ம் நாள் மதுரை அலங்காநல்லூருக்கு நேரில் செல்கிறேன்.

அந்த அலங்காநல்லூரில் உலகத்தரத்திலான ஏறுதழுவுதல் அரங்கத்தை நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் அவரது நூற்றாண்டு நினைவாக அமைத்துத் திறந்ததும் நமது திராவிட மாடல் அரசுதான் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, சென்னை அண்ணா சாலை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்கான 'உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கல்லூரி முதல்வர் ரமா உள்பட பேராசிரியர்கள், மாணவிகள் உடனிருந்தனர்.